

# சங்கொலி



'பொங்கு தமிழர்க்கு இன்னல் விளைத்தால்
சங்காரம் நிசமெனச் சங்கே முழங்கு'

ஆசிரியர் : வைகோ

திருவள்ளுவர் ஆண்டு 2057 ஆடி 01 மலர் 31 இதழ் 29 SANKOLI 17.07.2026 16 பக்கங்கள் விலை ரூ 10 Volume 31 Issue 29


# ஸ்டெர்லைட் ஆலையை அனுமதிக்காதீர்!

## பொதுமக்களைக் கொன்றவர்களை தண்டியுங்கள்!

## பொய் வழக்குகளை இரத்து செய்க!




# தூத்துக்குடியில் வைகோ வேண்டுகோள்

சுற்றுச்சூழல் பாதுகாப்பு பொதுக்கூட்டம் 02.07.2026 அன்று தூத்துக்குடி வி.வி.டி.சிக்னல் அருகே தூத்துக்குடி வடக்கு மாவட்டச் செயலாளர் ஆர்.எஸ்.ரமேஷ் தலைமையில் நடைபெற்றது. ஒழுங்கு நடவடிக்கைக் குழு உறுப்பினர் விநாயகா ரமேஷ் முன்னிலை வகித்தார். தூத்துக்குடி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ரஞ்சன் வரவேற்புரை நிகழ்த்தினார். மாநில வெளியீட்டு அணிச் செயலாளர் நக்கீரன் தொகுத்து வழங்கினார்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கனகராஜ், மக்கள் கண்காணிப்பகம் வழக்கறிஞர் ஹென்றி திபேன், மே 17 இயக்க ஒருங்கிணைப்பாளர் திருமுருகன் காந்தி, பேராசிரியை பாத்திமாபாபு, அரசியல் ஆலோசனைக் குழுச் செயலாளர் சிப்பிப்பாறை இரவிச்சந்திரன், ஆட்சிமன்றக் குழுச் செயலாளர் வழக்கறிஞர் எஸ்.வெற்றிவேல், தமிழ் தேசியக் கூட்டமைப்பு அ.வியனரசு, எஸ்.சௌந்தர்ராஜன், மெஸ்மர்காந்தன் வெள்ளையன், அருள்தந்தை செல்வராஜ், பகவத் சிங், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அ.வியனரசு, எஸ்.டி.பி.ஐ. மதுரை பிலால், தமிழக விவசாயிகள் சங்கம் ஓ.ஏ.நாராயணசாமி, கழக விவசாய அணிச் செயலாளர் வாரணவாசி கி.ராஜேந்திரன், மாவட்டச் செயலாளர்கள் கே.எம்.ஏ.நிஜாம், உவரி எம்.ரைமண்ட், சுதா பாலசுப்பிரமணியன், இராம. உதயசூரியன், வி.கே.சுரேஷ், ப.வேல்முருகன், கம்மாபட்டி ரவிச்சந்திரன், சாத்தூர் கண்ணன், சி.பி.எம். கே.பி.ஆறுமுகம், வி.சி.க. வில்சன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

தூத்துக்குடி மாநகர செயலாளர் முருகபூபதி நன்றி கூறினார்.

கழகப் பொதுச்செயலாளர் வைகோ அவர்கள் சிறப்புரை ஆற்றினார். அவரது உரை வருமாறு:-

இதந்தரு மனையின் நீங்கி
இடர்மிகு சிறைப்பட் டாலும்
பதந்திரு இரண்டும் மாறி
பழிமிகுந் திழிவுற் றாலும்
விதந்தரு கோடி இன்னல்
விளைந்தெனை அழித்திட் டாலும்
சுதந்திர தேவி ! நின்னைத்
தொழுதிடல் மறக்கி லேனே !

என்று மண்ணின் விடுதலைக்காகவும், மக்களின் சுதந்திரத்திற்காகவும் சித்ரவதைகளை சிறைச் சாலையில் அனுபவித்துகோரோமில் தொழிலாளர்கள் வாழ்வுக்காக தன் முன்னோர்கள் காலத்திலிருந்து திரட்டிய செல்வம் அனைத்தையும் இழந்து, இறுதி நாட்களில் பசியோடும், பட்டினியோடும் போராடி இந்த மண்ணை விட்டு மறைந்த கப்பலோட்டிய தமிழன் வீர சிதம்பரத்தின் கர்ஜனை கேட்ட முத்து நகரில் இந்த மண்ணைக் காக்கவும், இங்கே வீசுகின்ற காற்றை நச்சுப் புகையிலிருந்து விடுவிக்கவும், இங்கு வாழும் இலட்சக்கணக்கான மக்களின் உடல் நலனுக்கு ஏற்படும் கேடுகளைத் தவிர்க்கவும், ஸ்டெர்லைட் நாசகார நச்சாலையை எதிர்த்து 30 ஆண்டுகளாகப் போராடி வருகின்ற உணர்வோடு இந்தக் கூட்டத்திற்கு முன்னால் நான் நிற்கிறேன்.

என்னுடைய மரியாதைக்குரிய வழக்கறிஞர் ஹென்றி திபேன், இங்கே அமர்ந்திருக்கிறார்.

இங்கு 13 உயிர்கள் காவு வாங்கப்பட்டன. இரண்டு உயிர்கள் ஊசலாடிக் கொண்டிருக்கின்றன. இன்னொரு உயிரும் பறிபோக இருக்கிறது என்ற நிலையில், முன்னாள் நீதியரசர்களை முன்னாள் காவல்துறை உயர் அதிகாரிகளை கொண்ட குழுவினரை அழைத்துக் கொண்டு வந்து 15 நாட்கள் தெருத் தெருவாக ஆய்வு நடத்தி 2300 பக்கங்கள் கொண்ட அறிக்கையைச் சமர்பித்தார் ஹென்றி திபேன்.

இதை அறிந்த நான், உச்சநீதிமன்றத்தில் இறுதிக் கட்ட விவாதத்தின் போது, என்ன தடை வருமோ? என்னைப் பேச விடுவார்களோ இல்லையோ? என்று மனதிற்குள் போராடிக் கொண்டிருந்த வேளையில், ஹென்றி திபேன் அவர்களின் அறிக்கையை என் கையில் வைத்துக் கொண்டு உச்சநீதிமன்றத் தினுடைய நீதியரசர்கள், இந்தியாவின் தலைசிறந்த வழக்கறிஞரான நாரிமன் அவர்களின் அருமை மகன் ஹேரிங்டன் நாரிமன் தலைமை தாங்கிய அமர்வில் என்னுடைய மனுக்களும் விசாரிக்கப்பட வேண்டும் என்று நான் கேட்டேன்.

30 ஆண்டுகள் இந்த மண்ணின் மக்களைக் காப்ப தற்காக நடத்திய போராட்டத்தில் உண்ணா நிலை அறப்போராட்டம் குரூஸ் பொ்னாந்து சிலைக்கு அருகே மூன்று முறை, ஆட்சித் தலைவர் அலுவலகத்தை முற்றுகையிட்ட மறியல் போராட்டம் மூன்று முறை, ஊர் ஊராகச் சென்று நடத்திய நடைபயணம், 20 ஆயிரம் பேரைத் திரட்டி நடத்திய முற்றுகை மறியல் போராட்டம். அதனுடைய விளை வாக அன்று இரவு நிகழ்ச்சி முடிந்து, குடந்தையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்வ தற்காக நான் சென்றுகொண்டிருந்த வேளையில், தஞ்சை நகரில் தேநீர் அருந்துவதற்காக வாகனத்தை நிறுத்திவிட்டு, அங்கே தினதந்தி ஏட்டை வாங்கிப் படித்தேன்.

இரண்டு தொழிலாளர்கள் ஸ்டெர்லைட் ஆலையில் பலியானார்கள். ஸ்டெர்லைட் நிர்வாக இயக்குநர் பத்திரிக்கையாளர்களை அழைத்து, இவர்கள் இருவரின் சாவுக்குக் காரணம் வைகோ, விடுதலைப் புலிகளை அழைத்துக் கொண்டு வந்து, இந்த ஆலைக்குள் அவர்களை அனுமதித்து, இரண்டு பேரை காவு வாங்கிவிட்டார் என்று பத்திரிக்கையாளர் களிடத்தில் கூறினார். அந்தச் செய்தி தினத்தந்தியில் வெளிவந்தது.

வாழ்க்கையில் உண்மைக்கு ஒரு சதவிகிதம் கூட இடம் தராத எத்தனையோ அபாண்ட பழிகளை பல ஈட்டிகளாகச் சுமந்தவன் நான். அத்தகைய பழிகளில் ஒன்றுதான் இதுவும். ஆனால், அன்றைய காவல்துறை மாவட்டக் கண்காணிப்பாளர் ஜாங்கிட், அடுத்த ஒரு மணி நேரத்தில் பத்திரிக்கையாளர்களை அழைத்து, ஸ்டெர்லைட் நிர்வாக இயக்குநர் கூறி இருப்பது அப்பட்டமான பொய். வைகோ இங்கே விடுதலைப் புலிகளை அழைத்துக் கொண்டு வரவில்லை. அங்கு ஏற்பட்ட இயந்திரக் கோளாறு களால் இரண்டு பேர் பலியாகிவிட்டார்கள் என்று அவர் பதில் கொடுத்தார்.

இனி இதே போல போராட்டங்கள் நடத்தினால், எங்காவது ஒரு சிறிய வன்முறை நிகழ்ந்தால், நம்மீது பழிச் சொல் வரும். எனவே நாமும் உயர்நீதி மன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்வோம் என்று நான் ரிட் மனு தாக்கல் செய்தேன்.

அந்த வழக்கு விசாரணைக்கு வந்தபோது, இந்தியாவின் தலைசிறந்த வழக்கறிஞர்களில் ஒருவராகிய கே.கே.வேணுகோபால் ஸ்டெர்லைட் நிறுவனத்திற்காக வாதாடினார். தலைமை நீதியரசர் லிபரான் தலைமையிலான பசுமைத் தீர்ப்பாய அமர்வில் நாலரை மணி நேரம் வாதங்களை எடுத்து வைத்தார். இந்தத் தூத்துக்குடி நகரின் பிரபல மான வழக்கறிஞர்களாகிய நினைவில் வாழும் கிருஷ்ணன் அவர்கள் சென்னையில் வந்து எனக்காக தங்கியிருந்து இன்னின்ன புள்ளி விவரங்களில் வாதங்களை அடுக்குங்கள் என்று என்னைப் பயிற்று வித்தார். நான் ஏழு மணி நேரம் மூன்று நாட்கள் வாதாடியிருக்கிறேன்.

ஒரு கட்டத்தில் நீதிபதி லிபரான், “15 ஆயிரம் பேர் கைதானதாகச் சொல்கிறீர்களே, 10 இலட்சம் மக்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்றால், 15 ஆயிரம் போர்தானே உங்கள் போராட்டத்திற்கு வந்தார்கள் என்றவுடன், மாட்சிமைதங்கிய நீதிபதி அவர்களே, 40 கோடி மக்களின் விடுதலைக்காக நடத்தப்பட்ட சுதந்திரப் போர்க்களத்தில் மொத்தம் 42 ஆயிம் போர்தான் கைதானார்கள். அப்படியானால் 40 கோடி மக்களும் போராடவில்லை என்று கருதுகிறீர்களா?” என்று கேட்டவுடன், அவர் புன்முறுவலை தவழ விட்டார்.

நான் சுயநலத்துக்காகப் போராடவில்லை. எந்த லாப நோக்கத்தோடும் ஸ்டெர்லைட்டை எதிர்க்கவில்லை. அனில் அகர்வால் மீது எனக்கு தனிப்பட்ட பகை எதுவும் கிடையாது. இந்த மண்ணின் மக்களை, விவசாயிகளை, மீனவர்களை பாதுகாப்பதற்காக நான் இந்த வழக்கைத் தொடுத்துப் போராடிக் கொண்டிருக் கிறேன் என்று சொன்னவுடன், நீதியரசர் லிபரான், உங்கள் நேர்மைக்கு யாரும் சான்றிதழ் தரவேண்டிய அவசியம் இல்லை. உலகம் அறிந்த ஒன்று என்று தலைமை நீதிபதி கூறினார். அவர் ஒரு வார்த்தை வேறு ஏதாவது கூறியிருந்தால் மறுநாள் அது எட்டுக் காலச் செய்தியாக வந்திருக்கும். ஏடுகளுக்கும், ஊடகங்களுக்கும் என் மீது அவ்வளவு பிரியம். இந்தச் செய்தி ஒரு ஏட்டில்கூட வரவில்லை. அதைப் பற்றி நான் கவலைப்படவில்லை.

ஆனால், அந்த வழக்கு நடைபெற்று 2010 ஆம் ஆண்டு செப்டம்பர் 28 ஆம் தேதி, நீதியரசர் எலிபி தா்மராவ் அவர்களும், நீதிபதி பால் வசந்தகுமார் அவர்களும் ஸ்டெர்லைட் ஆலை நிரந்தரமாக மூடப்பட வேண்டும் என்று தீர்ப்பளித்தார்கள். ஸ்டெர்லைட் நிறுவனத்தால் அந்தத் தீர்ப்பை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் 48 மணி நேரத்தில் தடை ஆணை வாங்க முடிந்தது. உச்சநீதிமன்றத்தில் வழக்கு நடந்தது.

ஒரிசா மாநிலத்தைச் சேர்ந்த பட்நாயக் உச்சநீதி மன்றத்தில் ஒரு நீதிபதி. சென்னை உயர்நீதி மன்றத்தின் தலைமை நீதிபதியாக இருந்த கோகலே மற்றொரு நீதிபதி. 33 வாய்தாக்களுக்கு நானும், தேவதாசும் தவறாமல் கலந்துகொண்டோம். ஒவ்வொரு முறை டெல்லி சென்று வருவதற்கும் விமானப் பயணத்திற்கு பல்லாயிரக்கணக்கில் செலவு செய்திருக்கிறோம்.

ஸ்டெர்லைட் நச்சு ஆலை மராட்டிய மாநிலத்தில் அனுமதி பெற்று இரத்தினகிரி மாவட்டத்தில் தொடங்கப்பட்டு, கட்டடம் கட்டப்பட்டு, இயந் திரங்கள் பொருத்தப்பட்டன. அந்தப் பகுதியில்தான் அல்போன்சா மாம்பழங்கள் விளைகின்றன. விவசாயிகள் இனி மாம்பழங்களை ஏற்றுமதி செய்ய முடியாது. நச்சுக் காற்று பட்டு பழங்கள் கெட்டுப் போய்விட்டது என்று எவனும் வாங்க மாட்டான். ஆகையால் இந்த ஆலை இங்கு இருக்கக் கூடாது என்று ஒரு விவசாய சங்கத்தைத் தொடங்கி, பத்தாயிரம் பேர் அணிதிரண்டு ஒரு நாள் காலையில் கடப்பாறைகளோடும், சம்மட்டிகளோடும் உள்ளே புகுந்து ஸ்டெர்லைட் ஆலையை சுக்கு நூறாக உடைத்து நொறுக்கினார்கள். முதலமைச்சர் சரத் பவார், காவல்துறையை பின்வாங்கி வருமாறு உத்தரவிட்டார். அது மட்டுமல்ல, மறுநாளே ஆலை நடத்துவதற்குக் கொடுத்த அனுமதியை இரத்து செய்துவிட்டார்.

அதன் பிறகு வேதாந்தா குழுமத்துக்காரன் கோவா மாநிலத்திற்கு ஓடினான். கோவா மாநிலம் இங்கே அனுமதிக்க முடியாது என்று கூறிவிட்டது. மோடியின் மாநிலமான குஜராத்தில் ஆலையை ஆரம்பிக்கலாம் என்று சென்றான். ஒருக்காலும் அனுமதிக்க மாட்டோம் என்று கூறிவிட்டார்கள். எந்த மாநிலத்திற்குச் செல்வது என்று அவன் திகைத்தான். வேதாந்தா குழுமத்தின் உரிமையாளர் உலக கோடீஸ்வரர்களில் நான்காவது நபர்.

தமிழ்நாடு அவன் கண்ணுக்குத் தென்பட்டது. செயிண்ட் ஜார்ஜ் கோட்டை அவன் கண்களுக்குப் புலப்பட்டது. முதலமைச்சராக இருந்த சகோதரி ஜெயலலிதாவைச் சந்தித்தார். ஒரு வாரத்தில் ஆலை அமைப்பதற்கு அனுமதி கொடுக்கப்பட்டது. அதுமட்டுமல்ல, நிபந்தனைகளில் ஒன்று 250 மீட்டருக்கு பசுமை அமா்வு அமைக்கப்பட வேண்டும். ஸ்டெர்லைட் நிர்வாகம் அரசிடம் மனு போட்டது. அதிலிருந்து எட்டாம் நாள் 250 மீட்டர், 25 மீட்டராகக் குறைக்கப்பட்டது.

கடற்கரையிலிருந்து 250 கிலோ மீட்டருக்கு அப்பால் தான் ஒரு தொழிற்சாலை அமைய வேண்டும். அந்த நிபந்தனையையும் அரசாங்கம் இரத்து செய்தது.

இந்தக் காலகட்டத்தில்தான் ஸ்டெர்லைட் நச்சாலை யை அகற்ற வேண்டும் என்று உச்சநீதிமன்றத்தில் இரண்டரை மணி நேரம் நான் வாதங்களை எழுப்பியிருக்கிறேன்.

முன்னாள் சபாநாயகர் செல்லப்பாண்டியனிடம் சிறிது காலம் ஜூனியர் வழக்கறிஞராகப் பணியாற்றினேன். வணக்கத்திற்குரிய உச்சநீதிமன்ற நீதிபதியாக இருந்த - திராவிட முன்னேற்றக் கழகத்தை இந்த மண்ணில் கட்டி எழுப்பிய அண்ணாச்சி இரத்தின வேல் பாண்டியன் அவர்களிடம் மூன்று ஆண்டு காலம் நான் ஜூனியர் வழக்கறிஞராக இருந்தேன். மக்கள் நலனுக்காக நீதிமன்றம் சென்றிருக்கிறேன். மக்களைக் காப்பாற்றுவதற்காக நீதிமன்றத்தில் வாதாடியிருக்கிறேன்.

இந்த வாதங்களை எல்லாம் எடுத்து வைத்தபோது நீதியரசர் பட்நாயக், (திவான் சர் சி.பி.இராமசாமி ஐயரின் பேரன்) தலைசிறந்த வழக்கறிஞர் அரிமா சுந்தரத்தைப் பார்த்து வைகோவின் கேள்விகளுக்கு பதில் சொல்வது உங்களுக்கு இமாலய முயற்சியாக இருக்கும் என்றார்.

## தென்சென்னை வடக்கு மாவட்டக் கழக நிர்வாகிகள் கூட்டம்



தென்சென்னை வடக்கு மாவட்டக் கழக நிர்வாகிகள் கூட்டம் 05.07.2026 அன்று காலை 10 மணிக்கு வசந்தா திருமண மண்டபத்தில் மாவட்ட அவைத்தலைவர் எம்.கே.துரை மலையாளன் தலைமையில் நடைபெற்றது. மாவட்டக் கழகப் பொறுப்பாளர் சி.ரவிக்குமார் கூட்டத்தின் நோக்கம் குறித்து தொடக்க உரையாற்றினார். மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஆர்.தினேஷ்குமார். மாவட்டத் துணைச் செயலாளர் ராஜேஸ்வரி, க.வீரராகவன், ஆ.பன்னீர்தாஸ், மெக்கானிக் ரவிச்சந்திரன், மந்தைவெளி சுகுமார், மயிலை நாகேஷ், ஜிக்கி, பாலாஜி, வைகோ நடராஜ், எம்.ஆர்.கோவிந்தராஜ், மகளிர் அணி தவம், காந்தி, கௌரி, காஞ்சனா, சேப்பாக்கம் திருவல்லிக்கேணி நிர்வாகிகள் முஸ்தாக் பாய், வெங்கட் மாரி, ஜீவா ரவிச் சந்திரன், ராஜேஷ் ஜான் ஆகியோர் உரையாற்றிய பின் இணையதள அணி பொறுப்பாளர் நீதிதேவன் உரையாற்றினார். நிறைவாக தலைமைக் கழக செயலாளர் ஆ.வந்தியத்தேவன் சிறப்புரை ஆற்றினார்.

நியாயம் கிடைக்கும், நீதி கிடைக்கும் என்று நான் நம்பிக் கொண்டிருந்த நேரத்தில் 2013 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 21 ஆம் தேதி பொழுது புலர்வதற்கு முன் வைகறை வேளையில் ஸ்டெர் லைட் ஆலையிலிருந்து நச்சுப் புகை வந்து இந்த தூத்துக்குடி நகரத்தையே முற்றுகையிட்டது. தெரு ஓரங்களில் நடந்து கொண்டிருந்தவர்கள் மயங்கி விழுந்தார்கள். பூ விற்றுக் கொண்டிருந்த சகோதரி கள் மயங்கி விழுந்தார்கள். தேநீர் கடை வைத்திருந்த சகோதரர்கள் மயங்கி விழுந்தார்கள்.

மறுநாளே நான் இந்த தூத்துக்குடி நகரத்திற்கு ஓடோடி வந்து மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவல கத்தை முற்றுகையிட்டு நாங்கள் கைதானோம்.

ஏப்ரல் 02 ஆம் தேதி உச்சநீதிமன்ற தீர்ப்பு வரப்போ கிறது. ஸ்டெர்லைட் ஆலையை மூடும் தீர்ப்பை உச்சநீதிமன்றம் தரப்போகிறது என்று உளவுத் துறையினர் முதலமைச்சரிடம் கூறியிருக்கிறார்கள். ஜெயலலிதா முரட்டுத்தனமும், புத்திக் கூர்மையும் உள்ளவர்.

2 ஆம் தேதி தீர்ப்பு. ஆலையை மூடினால் மறுமலர்ச்சி திமுவுக்கு அல்லவா அந்தப் பெயர் சென்று சேர்ந்து விடும் என்று மார்ச் 29 அம் தேதி ஆலையை மூடுவ தாக, மின்சாரத்தைத் துண்டிப்பதாக, தண்ணீரைத் துண்டிப்பதாக ஒரு உத்தரவை வெளியிட்டார். 2ஆம் தேதி தீர்ப்பில் ஆலை மூடப்படும் என்று அவர் நினைத்துக் கொண்டிருந்தார். நானும் அந்த எண்ணத்தில்தான் உச்சநீதிமன்றத்தில் முதல் வரிசையில் அமர்ந்திருந்தேன்.

நீதிபதிகள் பட்நாயக், கோகலே இருவரும் நீதிமன்றத் தின் உள்ளே நுழைந்தார்கள். வழக்கமாக உள்ளே நுழைகிறபோதே என்னைப் பார்த்து புன்முறுவல் பூத்து, சிரிப்பை மலர விடுகின்ற நீதியரசர் பட்நாயக் தலை நிமிரவே இல்லை. குனிந்த வண்ணமே உட்கார்ந்திருந்தார்.

தீர்ப்பு விரோதமாக வரப்போகிறது என்று நான் புரிந்து கொண்டேன். ஆலை தொடர்ந்து நடக்கட்டும் என்று தீர்ப்பளித்தார்கள். அதிர்ந்துபோன நான், அந்தத் தீர்ப்பை வாசித்து முடித்தவுடன், நீதிபதி அவர்களே, என் கருத்தை இங்கே சொல்லலாமா? என்றேன். சரி, கூறுங்கள் என்றார்.

மகாராஷ்டிரா மாநிலம், இரத்தினகிரி மாவட்ட விவசாயிகள் ஸ்டெர்லைட் ஆலையை சுக்கு நூறாக உடைத்தார்கள். அவர்கள்தான் வீரர்களா? தூத்துக் குடியில் இருக்கும் ஆலையை உடைக்கின்ற அளவுக்கு வீரமும், உரமும், அதே சம்மட்டியையும், கடப்பாறையையும் ஏந்தும் தைரியம் எனக்குக் கிடையாதா? தமிழர்கள் நாங்கள் போர்க்குணம் கொண்ட மரபைச் சேர்ந்தவர்கள். மராட்டியர்களை விட நாங்கள் வீரம் நிறைந்தவர்கள் என்பதை சுதந்திரப் போராட்டத்திலேயே நாங்கள் நிருபித்திருக்கிறோம். நாங்கள் வன்முறையை நாடினோமா? ஆலையை உடைக்கத் திட்டமிட்டோமா? ஆனால், அந்த நச்சு ஆலையைத் திறப்பதற்கு நீங்கள் தீர்ப்பளித்திருக் கிறீர்கள். நீதி வேண்டும் என்று நான் நீதிமன்றத் தின் கதவுகளைத் தட்டினேன். ஆனால் இங்கே நீதி மழுங்கடிக்கப்பட்டுவிட்டது; சாகடிக்கப்பட்டு விட்டது என்று கூறினேன்.

உங்களை மிகவும் பாராட்டி ஒரு பாரா எழுதியிருக் கிறேனே என்றார். அதில் எனக்கு என்ன பயன்? இந்த ஆலையைத் திறப்பதற்கு நீங்கள் உத்தரவிட்டிருக் கிறீர்கள் என்றேன் நான்! அதன் பின்னர் தீர்ப்பாயத்திற்கு வந்தோம்.

ஹென்றி திபேன் அவர்களே, தீர்ப்பாயத்தில் நானும் மனுதாக்கல் செய்திருந்தேன். அரிமா சுந்தரம் எழுந்து, வைகோவை இங்கே பேசவிடாதீர்கள். அவரது மனுவை நீங்கள் ஏற்கக் கூடாது. அவர் பேசுவ தற்கு நீங்கள் அனுமதிக்கக் கூடாது. ஏன்? என்று கேட்டார். தேவையற்ற பிரச்சினைகளை எழுப்புவார் அவர். அந்தத் தீர்ப்பாயத்தின் நீதிபதி, நீதிக்கு அருகதையற்ற நீதிபதி எல்லோருக்கும் வாய்ப்புக் கொடுத்தார். எனக்கு வாய்ப்புக் கொடுக்கவில்லை.

அடுத்த விசாரணைக்குச் சென்றோம். உச்சநீதி மன்றத்தில் நீதிபதியாக இருந்த ஒருவருக்கு மாலையில் பதவி காலம் முடிகிறது. அடுத்த ஒரு

---

தலைமைக் கழக அறிவிப்பு

## திருப்பூர் மாநகர் மாவட்டக் கழக நிர்வாகிகள் தேர்வு

திருப்பூர் மாநகர் மாவட்டக் கழக நிர்வாகிகளாக கீழ்க்குறிப்பிட்டுள்ளவர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

**அவைத்தலைவர் :**

**சு.சம்பத்**
த/பெ. க.சுப்பிரமணியம்
45, கே.வி.பி. லே-அவுட்,
ஆலங்காடு, கருவம்பாளையம்,
திருப்பூர் மாவட்டம் - 641 604
அலைபேசி எண். 98422 45378

**செயலாளர் :**

**இ.என்.கந்தசாமி** பி.எஸ்.சி., பி.எல்.,
இளமுகில் வளாகம்,
13/22, DRG வீதி, (HDFC வங்கி அருகில்),
பல்லடம் ரோடு, தென்னம்பாளையம்,
திருப்பூர் மாவட்டம் - 641 604;
செல் : 93448 85086; 93451 40101

**பொருளாளர் :**

**பி. திருமூர்த்தி**
எண். 3/187 பாரப்பாளையம்,
மண்ணரை (அஞ்சல்), ஊத்துக்குளி ரோடு,
திருப்பூர் மாவட்டம் - 641 607
செல் : 98422 10683

**துணைச் செயலாளர்கள் :**

**தி.தளபதி பிரபு (எ) கோபிநாதன்**
எண். 11/15, ஏ.வி.பி. லே-அவுட்,
1 ஆவது தெரு, காந்தி நகர் அஞ்சல்,
திருப்பூர் மாவட்டம் - 641 603
செல் : 99409 76800

**எல். ஆனந்தகுமார்**
எண். 4/309, இடுவம்பாளையம்
(மேற்கு பிள்ளையார் கோயில் பின்புறம்)
திருப்பூர் மாவட்டம் - 641 687
செல் : 96266 54540

வழக்கறிஞர் **சி.கனிமொழி**
எண். 141 ஏ, சாமுண்டிபுரம்,
நாகாத்தம்மன் கோவில் வடக்கு வீதி,
15 வேலம்பாளையம்,
திருப்பூர் மாவட்டம் - 641 652
அலைபேசி எண். 59007 81149

**மு. பூபதி**
எண். 4-A, தியாகி குமரன் வீதி,
புதுக் காலனி, 15 வேலம்பாளையம்,
திருப்பூர் மாவட்டம் - 641 652
செல் : 88707 82393

சம்பந்தப்பட்ட கழகத் தோழர்கள் மேற்குறிப்பிட்டவாறு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள திருப்பூர் மாநகர் மாவட்டக் கழக நிர்வாகிகளுடன் தொடர்பு கொண்டு கழகப் பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படு கிறார்கள்.

**'தாயகம்'**
சென்னை - 8
09.07.2026

**வைகோ**
பொதுச் செயலாளர்,
மறுமலர்ச்சி தி.மு.க.,

---

மணி நேரத்தில் பசுமைத் தீர்ப்பாயத்திற்குத் தலை வராக ஆக்கப்பட்டார். அவர் பொரிந்து தள்ளினார். என்னைப் பார்த்து காய்ந்து தள்ளினார். அடுத்து அரிமா சுந்தரம் இந்த ஸ்டெர்லைட் ஆலை இயங்கா விட்டால் நாட்டிற்கு பெரும் பாதகம் ஏற்படும். உடனே திறக்க ஆணையிடுங்கள் என்றார். அடுத்த விசாரணையில் ஸ்டெர்லைட் ஆலையைத் திறப்பதற்கு தீர்ப்பளிக்கப் போகிறேன். அதற்குள் உங்களுக்கு என்ன அவசரம் என்று நீதிபதி கூறினார்.

நான் நீதிமன்றத்திற்கு வெளியே வந்து, அடுத்த விசாரணையில் ஸ்டெர்லைட் ஆலையைத் திறப்ப தற்கு நான் தீர்ப்பளிக்கப் போகிறேன் என்று நீதிபதி கூறுகிறார். நான் உச்சநீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்திருக்கிறேன். உச்சநீதிமன்றத்தில் ஹேரிங்டன் நாரிமன் அமர்வில் வழக்கு விசாரணைக்கு வந்தது. அதில் என்னுடைய இரண்டு ரிட் மனுக்கல் சேர்க்கப் படவில்லை. என் மனுக்கள் தூர எறியப்பட்டுவிட்டன.

நான் ஹென்றி திபேனைப் பார்த்து அறிக்கை வாங்கி வைத்திருந்தேன். நூற்றுக்கும் மேற்பட்ட வழக்கறிஞர்கள் இருக்கிறார்கள். நான் கடைசி வரிசைக்குப் பின் வரிசையிலிருந்து, "நீதிபதிகளே நான் இங்கே நீதி கேட்கிறேன்" என்று கூறினேன். நீதிபதி திகைத்துப் போய் என்னைப் பார்த்தார்.

தூத்துக்குடி மண்ணில் சிந்தப்பட்ட இரத்தம் இந்த நீதின்றத்திற்கு வந்து நிதி கேட்கிறது. முன்னால் வந்து உங்கள் வாதங்களை வையுங்கள் என்றார் நீதிபதி. பத்து நிமிடத்தில் என்ன வாதங்களை வைத்துவிட முடியும்? பக்கங்களைப் புரட்டிக் கொண்டே, அதிகமான ஆதாரங்கள் இருக்கின்றன. இந்தக் குறைந்த நேரத்தில் அவற்றை எல்லாம் எப்படிச் சொல்வதென்று தெரியாமல் மிகவும் பதட்டமாக இருக்கிறது என்றேன். நீதிபதி சிரித்துக் கொண்டே, நீங்களா தளர்ச்சியாக இருக்கிறீர்கள்? இல்லை, இல்லை, எங்களை அல்லவா பதட்டம் அடையச் செய்கிறீர்கள் என்றார்.

அதன் பிறகு வைகோவின் இரண்டு ரிட் மனுக்கள் இருக்கிறதா? என்று நீதிமன்ற பணியாளரிடம் நீதிபதி கேட்டார். அவர் இருக்கிறது என்று கூறியவுடன், அதை ஏன் இதில் சேர்க்கவில்லை? அந்த இரண்டு ரிட் மனுக்களையும், முக்கிய மனுக்களோடு சேர்த்து சென்னை உயர்நீதிமன்றத்திற்கு அனுப்புகிறேன் என்று நீதிபதி கூறினார்.

நீதிபதிகள் சிவஞானம், பவானி சுப்பராயன் அமர்வில் இந்த வழக்கு வந்தது. மூன்று மணி நேரம் நான் வாதாடியிருக்கிறேன். கண்கள் பணிக்க, நெஞ்சம் கொதிக்க இங்கே நடைபெற்ற சம்பவங்களை எல்லாம் வரிசையாக அடுக்கி, இந்த ஸ்டெர்லைட் நச்சு ஆலை சுற்றுச் சூழலுக்கு விரோதமானது என்பதற்கான புள்ளி விவரங்களை ஒன்றன் பின் ஒன்றாக அடுக்கினேன்.

அந்த ஆலையில் இருக்கக்கூடிய புகைக் குழாய் எத்தனை மீட்டர் இருக்க வேண்டும் என்ற நிபந்தனை கடைபிடிக்கப்பட்டிருக்கிறதா? என்று நான் வாதாடினேன். இங்கே நீதி கிடைக்கும் என்று நான் எதிர்பார்க்கிறேன் என்று வாதிட்டேன்.

நீதியரசர்கள் சிவஞானமும், பவானி சுப்பராயனும் ஸ்டெர்லைட் ஆலை மூடப்படும் என்று அற்புத மான தீர்ப்பை தந்தனர். அதனால் அவர்கள் உச்சநீதி மன்றத்திற்குச் செல்கின்ற வாய்ப்புப் பறிபோயிற்று என்பதை ஹென்றி திபேன் கூறினார்.

தற்போது பசுமைத் தாமிரம் என்கிறார்கள். ஏன் தாமிரம் எல்லா இடங்களிலும் வாங்கலாமே? ஆஸ்திரேலியாவிலிருந்து வாங்குகின்ற தாமிரம் மிக மிக மாசடைந்த கேவலமானது. அதை லாரியிலிருந்து இறக்கி திறந்தவெளியில் கொண்டு செல்கிறான். காற்று வழியாக நச்சுக் காற்று பரவுகிறபோது இந்தத் தூத்துக்குடி மக்களுக்கு சரும நோய்கள், புற்று நோய்கள் எல்லாம் வரும்.

நாட்டில் தாமிரத்திற்கு பஞ்சம் ஏற்பட்டுவிட்டது. இப்போது நமக்கு தாமிரம் வேண்டும். நாம் இறக்குமதி செய்துதான் பயன்படுத்துகிறோம். ஆகையால் நம் நாட்டிலேயே உற்பத்தி செய்ய வேண்டும் என்கிறார் பிரதமர் நரேந்திர மோடி.

பிரதமர் அவர்களே, தாமிர உற்பத்தியில் இவ்வளவு அக்கறை இருக்கிறதே? உங்கள் குஜராத்தில் ஏன் நீங்கள் திறக்கக் கூடாது. பா.ஜ.க ஆட்சி செய்கின்ற மாநிலங்களில் ஏன் தொடங்கக் கூடாது.

மராட்டியத்தின் பக்கம் போக முடியாது. மத்தியப் பிரதேசம், உத்திரப் பிரதேசம் கண்ணுக்குத் தெரிய வில்லையா? எங்கள் தமிழ்நாடுதான் கிடைத்ததா? இப்பொழுது பசுமைத் தாமிரம் என்று கூறிக் கொண்டு, ஒப்பந்தக்காரர்களை எல்லாம் அழைத்து, இலட்சக்கணக்கில் வருமானம் கிடைக்கும் ஒப்பந்தம் உனக்கு உடனே கிடைக்கும். மற்றவர்களை அழைத்து, உங்களுக்கு என்னென்ன தேவையோ அவ்வளவையும் செய்து தருகிறோம் என்கிறார்கள்.

தெருவுக்குத் தெரு நூலகங்கள், தெருவுக்குத் தெரு மருத்துவமனை, தெருவுக்குத் தெரு பள்ளிக்கூடம் எல்லாம் ஸ்டெர்லைட் செய்து கொடுக்கும். உங்கள் வீட்டில் ஒவ்வொரு பிள்ளைக்கும் வேலை கொடுக்கப்படும் என்கிறான்.

நான் மக்களைக் குறை சொல்லவில்லை. பாவம், அப்பாவி மக்கள். இந்த ஆசை வார்த்தைகளுக்கு அவர்கள் மயங்கிக் கிடக்கிறார்கள். ஆனால் தூத்துக் குடி மக்களே உங்களுக்காக, உங்கள் நலனுக்காக என் உயிரைப் பணயம் வைத்துக் கொண்டு போராடியவன் நான்.

இந்தியாவின் தலைசிறந்த மருவத்துவர் என்னை அழைத்து, நீங்கள் உலகக் கோடீசுவரனை எதிர்க்கிறீர்களே, உங்கள் பாதுகாப்பில் நான் கவலை கொள்கிறேன். எதற்காக உலகக் கோடீசுவரனை நீங்கள் எதிர்க்கிறீர்கள்? யாரை நினைத்தாலும் அவன் வளைத்துப் போடுவான். அண்ணா திமுக அரசு கைவசப்படுத்தப்பட்டது. திமுக அரசு இருக்கிறபோதும், அரசு வழக்கறிஞர் அரசின் அத்தனை நிபந்தனைகளையும் ஸ்டெர்லைட் நிர்வாகம் ஏற்றுக் கொண்டுவிட்டதாக அபிடவிட் தாக்கல் செய்தார். நீங்கள் தமிழ்நாடு அரசின் வழக் கறிஞரா? ஸ்டெர்லைட் ஆலை வழக்கறிஞரா? என்று நீதிபதி கேட்டார். ஆக அந்த ஆட்சியிலும் ஸ்டெர்லைட்டுக்கு இடம் கிடைத்தது.

101 பேர் மீது போடப்பட்ட வழக்குகளை உடனே திரும்பப் பெறப்பட வேண்டும். குற்றச்சாட்டுக்கு ஆளாகி இருக்கின்ற காவல்துறை அதிகாரிகள் மீது வழக்குப் பதிவு செய்து, கைது செய்து, பணியிடை நீக்கம் செய்து அவர்களை காராகிரகத்தில் அடைக்க வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு ஹென்றி திபேன் வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

இது ஹென்றி திபேனுடைய கோரிக்கை மட்டுமல்ல, நீதி கேட்கின்றவர்களின் கோரிக்கை. இந்தக் கோரிக்கையை முதலமைச்சர் பரிசீலனை செய்வார் என்று நான் நம்புகிறேன்.

துப்பாக்கிச் சூட்டில், ஸ்னோலின், ஆண்டனி செல்வராஜ், கிராஸ்டன், கண்ணையா, கார்த்தி, காளியப்பன், ஜான்சி, ரஞ்சித், பரத், தமிழரசன், ஜெயராம், செல்வசேகர், வள்ளியம்மாள் ஆகியோர் பலியானார்கள்.

பின்னர் சண்முகம், மணிராஜ், கடைசியில் ஜஸ்டின் என 16 பேர் கொல்லப்பட்டிருக்கிறார்கள்.

இவர்கள் சிந்திய இரத்தத்திற்கு நீதி வேண்டும்.

இவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தினார்களே, அந்தக் காவலர்கள் கைது செய்யப்பட வேண்டும்.

காவலர்கள் துப்பாக்கிச் சூடு நடத்துவதற்கு உத்தர விட்ட எஜமானன் யார்? அவர் மீதும் வழக்குப் பதிவு செய்து, கைது செய்ய வேண்டும்.

இந்த தூத்துக்குடி மாவட்டத்திற்கு அபிஷேக் குப்தா என்று ஒரு காவல்துறை கண்காணிப்பாளர் வந்திருக்கிறார். அவர் இந்தக் கூட்டத்தை நடத்தக் கூடாது என்று முடிவு செய்து, கூட்டத்திற்கு அனுமதி கிடையாது என்று நேற்று பகலில் சொல்லி இருக்கிறீர்கள்.

குப்தா அவர்களே, இந்த வைகோவின் வரலாற்றை நீங்கள் அறிந்திருக்க மாட்டீர்கள். சிறையில் இருந்த வாறே உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்து, தடை செய்யப்பட்ட இயக்கத்தை ஆதரித்துப் பேசுவது குற்றம் அல்ல என்ற தீர்ப்பைப் பெற்றுக் கொடுத்தவன் நான். தடை செய்யப்பட்ட இயக்கத் தையே ஆதரித்துப் பேசலாம் என்று நீதிமன்றத் திலேயே தீர்ப்பைப் பெற்றவன் நான்.

மூன்று நாட்களுக்கு முன்னால் இந்தக் கூட்டத்திற்கு அனுமதி கிடையாது என்று நீங்கள் சொல்லியிருந் தால், நான் உயர்நீதிமன்றத்தின் கதவுகளைத் தட்டி இருப்பேன். கூட்டத்திற்கு அனுமதியும் பெற்றிருப் பேன். கூட்டம் நடந்திருக்கும்.

ஆனால் இந்தக் கூட்டத்தை நடத்த விடக் கூடாது என்று நீங்கள் முடிவு செய்ததை அறிந்த நான், தமிழ்நாடு அமைச்சரவையின் கவனத்திற்குக் கொண்டு சென்றேன். அடுத்த அரை மணி நேரத்தில் கூட்டம் நடத்துவதற்கான அனுமதி தாராளமாகக் கிடைக்கும். நீங்கள் கவலைப்பட வேண்டாம் என்றார்கள் அவர்கள்.

முதலமைச்சர் தலைமையில் தோழமைக் கட்சிகளின் கூட்டம். கூட்டம் முடிந்தது. இரவு ஏழு மணி ஆகிறது. நான் காரில் ஏறி அமர்ந்தேன். மாவட்டச் செயலாளர் என் தொலைபேசியில் அழைத்து, கூட்டம் ரத்து செய்யப்பட்டுவிட்டது என்று எழுதி கையெழுத்துப் போடு என்று மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் அலுவலகத்திலிருந்து தொலைபேசியில் மிரட்டு கிறார்கள் என்றார். நான் மீண்டும் அமைச்சரவையில் இருப்பவர்களோடு தொடர்பு கொண்டு, நீங்கள் அனுமதி கிடைக்கும் என்றீர்கள். கூட்டம் நடத்தக் கூடாது என்று மாவட்ட காவல்துறை கண்காணிப் பாளர் மிரட்டுகிறார். அப்படி அனுமதி கொடுக்கா விட்டால், அடுத்த ஒரு மணி நேரத்தில் என் தலைமையில் நூற்றுக்கணக்கானவர்களுடன் சென்று மாவட்ட கண்காணிப்பாளர் அலுவலகத்தை முற்றுகையிட்டுப் போராடுவோம். துப்பாக்கிகளின் சல சலப்புக்கெல்லாம் அஞ்சுகிறவன் அல்ல, நாங்கள் அங்கே போராட்டம் நடத்துவோம் என்றேன்

அவசரப்படாதீர்கள். இன்னும் சிறிது நேரத்திற்குள் உங்களுக்கு அனுமதி வந்துவிடும் என்றார்கள். பின்புதான் அனுமதி கொடுக்கப்பட்டது. அதுவும் எப்படிப்பட்ட அனுமதி தெரியுமா? ஒன்பதரை மணிக்குள் இந்தக் கூட்டத்தை முடிக்க வேண்டும். என்னய்யா நியாயம்? தேர்தல் நேரத்திலேயே பத்து மணி வரை கூட்டம் நடத்தலாம். இந்த மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளருக்கு ஒன்பதரை மணிதான் நடு இரவா? ஒன்பதரை மணிக்கு மேல் என்னை பேசவிடக் கூடாது. யாரும் பேசக்கூடாது என்பது உத்தரவா? உங்கள் மீது குற்றச்சாட்டு தொடுக்க எனக்கு எவ்வளவு நேரம் ஆகும்? நான் எவ்வளவோ பேர் மீது குற்றச்சாட்டுகளைத் தொடுத்திருக்கிறேன். பெரிய சக்திவாய்ந்தவர்கள் மீது, கடுமையான அதிகாரம் கொண்டவர்கள் மீது எதற்கும் அஞ்சாமல் குற்றச்சாட்டுக்களைத் தொடுத் திருக்கிறேன். இப்படி உத்தரவிடுவதற்கு உங்களை பின்புலத்திலிருந்து இயக்குவது எந்த சக்தி மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளரே?

இப்படி பேசுவதற்காக ஒரு வழக்கைப் போட்டு என்னை நீங்கள் நீதிமன்றத்திற்கு வரவழைக்கலாம். அதற்கும் நான் தயாராக இருக்கிறேன். ஒன்பதரை மணிக்குள் கூட்டத்தை முடிக்க வேண்டும் என்று கூறுவதற்கு என்ன காரணம்? யார் சொல்லி இப்படிப்பட்ட உத்தரவைப் போடுகிறீர்கள்? நாங்கள் இந்த மண்ணின் மக்கள். வீர வரலாறு படைத்த இந்த மண்ணில் வாழும் மக்களைக் காப்பாற்ற வேண்டும் என்பதற்காகத்தான் 30 ஆண்டுகளாக வைகோ போராடிக் கொண்டிருக்கிறானே தவிர, இதனால் ஓட்டுப் போட்டு விடுவார்களா? இத்தனை ஆண்டுகள் போராடியதற்காக ஓட்டுப் போடு வார்களா? அதெல்லாம் கிடையாது.

சீமைக் கருவேல மரத்தை வெட்டுகிறேன். அதற்காக ஒரு ஓட்டு கிடைக்குமா? கிடையாது. ஆனால் பேய் செடி என்று சொல்லப்படுகின்ற இந்த மரத்தை அடியோடு அழிக்காவிட்டால் விவசாயம் அழிந்து போகும். சுற்றுச் சூழல் அழிந்து போகும். பிராண வாயுவை உறிஞ்சிக் கொள்ளும். கரியமல வாயுவை வெளியே தள்ளும். பறவைகள் கூடு கட்டாது. ஆடு, மாடுகள் அதன் நிழலில் தங்காது. சினை பிடிக்காது என்பதற்காக அங்கே போகாது. மொத்த விவசாயத்தையும் அழித்துவிடும்.

இந்த சீமைக் கருவேல மரத்தை அகற்றுவதற்காக நான் வழக்குத் தொடுத்து, 2015 இல் நீதிபதி செல்வம், சீமைக் கருவேலம் தமிழ்நாடு முழுவதும் அகற்றப்பட வேண்டிய விஷச் செடி. உங்கள் தோழர்களை அழைத்துச் சென்று நீங்களே ஏன் இந்த வேலையைச் செய்யக் கூடாது? மற்றவர்களுக்கு அது ஒரு எடுத்துக்காட்டாக இருக்குமே? என்றார்.

அதன்படி மாவட்ட வாரியாக ஊர் ஊராகச் சென்று சீமைக் கருவேல மரங்களை அகற்றுகின்ற வேலையில் நான் ஈடுபட்டேன். பின்பு ஐ.ஐ.டி நீதிமன்றத்தில் தடை ஆணை வாங்கிவிட்டது. அதற்காக உயர்நீதிமன்றத்தில் ஒவ்வொரு விசாரணைக்கும் சென்றேன். கடைசியில் நீதிபதிகள் பரத சக்கரவர்த்தியும், சதீஷ்குமாரும் சீமைக் கருவேல மரங்கள் அடியோடு அகற்றப்பட வேண்டும். இதில் அரசாங்கம் நேரடியாக ஈடுபட வேண்டும். அதற்காக அதிகாரிகளைப் பயன்படுத்த வேண்டும் என்று அருமையான தீர்ப்பை தந்தார்கள்.

சீமைக் கருவேல மரங்களை அகற்றும் பணியில் ஈடுபட்டிருப்பதில் எனக்கு என்ன அரசியல் லாபமா? இந்த வேலையைச் செய்வதற்காக எனக்கு பத்து ஓட்டு கிடைக்குமா? ஏன் என்னை நானே வருத்திக் கொண்டு, தோழர்களையும் ஈடுபடுத்திக் கொண்டிருக்கிறேன்? இந்த செந்தமிழ் நாட்டை நான் உயிராக நேசிக்கிறேன். நான் பிறந்த பொன்னாடு தமிழ்நாடு. இன்னொரு முறை நான் பிறந்து வரப்போவது இல்லை. ஆனால் இந்த மண்ணில் பிறந்ததால், உலகத்துக்கே கலாச்சாரத்தையும், நாகரிகத்தையும் பண்பாட்டையும் தாலாட்டி வார்ப்பித்த செந்தமிழ் நாட்டில், கலையும், கலைகளும் வளர்ந்த நாட்டில், இந்த மண்ணில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்று வகுக்கப்பட்ட இந்த நாட்டில் ஆயிரம் ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்கு முன்னாலேயே நாகரிகம் தழைத்த இந்த செந்தமிழ் பூமியில் உலகத்துக்கே அறநூல்களைத் தந்த செந்தமிழ் நாட்டில் நான் பிறந்ததன் பலனாக செய்ய வேண்டிய கடமையைச் செய்ய வேண்டும் என்று அரசியல் பொதுவாழ்வுக்கு 1964 இல் அண்ணாவின் முன்னிலையில் கோகலே மண்டபத்தில் பேசி, திராவிட முன்னேற்றக் கழகத்தில் 29 ஆண்டுகள் பணியாற்றியிருக்கிறேன். உயிருக்கு உயிராக பெரியசாமியை நான் நேசித்திருக்கிறேன். 12 மாதங்கள் மிசா சிறைவாசத்தை ஏற்றிருக்கிறேன். 25 முறை சிறைச்சாலைக்குச் சென்றிருக்கிறேன்.

கலைஞர் எனக்கு இந்திய மாநிலங்களவை உறுப் பினர் பதவியைத் தந்தார். மாநிலங்களவையில் நன்றி யோடு தமிழ்நாட்டுக்கும், திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் உச்சியில் கொடி பிடித்து பணியாற்றி இருக்கிறேன். அதை நான் மறுக்கவில்லை.

ஆனால் செய்ய வேண்டிய கடமையை தமிழ்நாட்டுக் காகச் செய்ய வேண்டும் என்பதற்காகத்தான் மிகச் சரியாக செய்தேன். இந்தத் தமிழ்நாட்டின் வாழ்வா தாரங்களைக் காக்க நாங்கள் போராடிய அளவுக்கு யார் போராடியது? சொல்லட்டும்.

சிப்பிப்பாறை இரவிச்சந்திரன் சரியாகக் கேட்டார். முல்லைப் பெரியாறு - பென்னிக் குயிக் அணையைக் காக்க 12 வருடங்கள் போராடி, பத்து இலட்சம் பேரைத் திரட்டியிருக்கிறேன்.

நியூட்ரினோ எனது கனவுத் திட்டம் என்று பிரதமர் கூறினார். சாதாரண பட்டிக் காட்டில் பிறந்த சாதாரணமானவன் நியூட்ரினோ என்ற நாசகார திட்டத்தை 11 ஆண்டுகளாக நீதிமன்றத்தில் தடை வாங்கி நிறுத்தி வைத்திருக்கிறேன்.

நெய்வேலி நிலக்கரி நிறுவனம் வடநாட்டு பெரு முதலாளிகளுக்கு விற்கப்பட இருந்த நிலையில், இனி ஒன்றும் செய்ய முடியாது என்று எல்லோரும் கை விரித்தபோது, ஆண்டவர்கள், ஆட்சியில் இருந்த வர்கள் எல்லோரும் கை விரித்தபோது, வாஜ்பாயிடம் சென்று காமராஜர் காலத்தில் நேரு தொடங்கி வைத்தது. எங்கள் மண், எங்கள் தொழிலாளர்களின் வியர்வையால் வளர்ந்திருக்கும் நிலக்கரி நிறுவனத் தின் பங்குகளை முதலாளிகளுக்கு ஏன் விற்பதற்கு ஏற்பாடு செய்கிறீர்கள்? என்றேன். அமைச்சரவை முடிவு செய்துவிட்டதே? என்றார். அந்த முடிவை உங்களால் மாற்ற முடியும்.

## திண்டுக்கல் மாவட்ட செயல்வீரர்கள் கூட்டம்
## மாவட்டச் செயலாளர் என்.செல்வராகவன் அறிவிப்பு



திண்டுக்கல் மாவட்டக் கழக நிர்வாகிகள் கூட்டம் 25.07.2026 சனிக்கிழமை மாலை 3 மணிக்கு மாவட்டக் கழக அலுவலகத்தில் மாவட்டக் கழக அவைத் தலைவர் பி.கே.சுதர்சன் தலைமையில் நடைபெற உள்ளது.

நிர்வாக வசதிக்காக மாவட்ட அமைப்பை பிரித்தல், டெல்லியில் நடைபெற உள்ள தலைவர் வைகோ அவர்களின் புத்தக வெளியீட்டு விழாவிற்கு செல்வது மற்றும் கழக வளர்ச்சிப் பணிகள் குறித்து முடிவெடுக்க உள்ள இக்கூட்டத்தில் கழகப் பொருளாளர் **மு.செந்திலதிபன்** அவர்களும், தலைமைக் கழகச் செயலாளர் **ஆ.வந்தியத்தேவன்** அவர்களும் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொள்ள உள்ளார்கள்.

மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர்க் கழக செயலாளர்கள், அணிகளின் அமைப்பாளர்கள், செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள் அவசியம் கலந்து கொள்ளுமாறு மாவட்டக் கழகச் செயலாளரும், உயர்நிலைக் குழு உறுப்பினருமான என்.செல்வராகவன் அவர்கள் கேட்டுக் கொள்கிறார்.

## தஞ்சாவூர் வடக்கு மாவட்ட செயல்வீரர்கள் கூட்டம்
## மாவட்டப் பொறுப்பாளர் டி.ஜி.சரவணன் அறிவிப்பு



தஞ்சாவூர் வடக்கு மாவட்டக் கழக செயல்வீரர்கள் கூட்டம் 13.07.2026 திங்கள்கிழமை மாலை 4 மணிக்கு கும்பகோணம் வேழம் ரெசிடென்சியில் டி.ஜி.சரவணன் தலைமையில் நடைபெற உள்ளது.

விடுபட்ட மாவட்ட நிர்வாகிகளை நியமிப்பது, செப்டம்பர் 15, அண்ணா பிறந்தநாள் விழாவில் கலந்து கொள்வது, பொதுச்செயலாளர் வைகோ அவர்களின் புத்தக வெளியீட்டு விழாவில் கலந்து கொள்வது ஆகியன குறித்து முடிவெடுக்க உள்ள இக்கூட்டத்தில் கழகப் பொருளாளர் **மு.செந்திலதிபன்** அவர்களும், உயர்நிலைக் குழு உறுப்பினர் ஆடுதுறை **இரா.முருகன்** அவர்களும் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொள்ள உள்ளார்கள். மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர்க் கழக செயலாளர்கள், அணிகளின் அமைப்பாளர்கள், செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள் அவசியம் கலந்து கொள்ளுமாறு மாவட்டக் கழகப் பொறுப்பாளர் டி.ஜி.சரவணன் அவர்கள் கேட்டுக் கொள்கிறார்.

வைகோ எனது வளர்ப்பு மகன் என்று பீகார் மாநிலத்தில் நடைபெற்ற கூட்டத்தில் நீங்கள் கூறினீர்கள். நான் பிறந்த தமிழ்நாட்டுக்கு நான் ஏதாவது ஒரு நன்மையாவது செய்ய வேண்டாமா? இதை நீங்கள் இந்த நேரத்தில் தடுக்க வேண்டாமா? என்றபோது, நெகிழ்ந்து போனவராக வாஜ்பாய் நெய்வேலி நிலக்கரி நிறுவனம் தனியார் மயம் ஆக்கப்பட மாட்டாது என்று கூறினார். இதை பத்திரிக்கையாளர்களிடம் தெரிவிக்கலாமா? என்ற போது, இங்கிருந்தவாறே சொல்லுங்கள் என்றார். நானும் அப்படியே செய்தேன். மறுநாள் இந்து ஆங்கில நாளிதழ் முதல் பக்கத்தில் கட்டம் கட்டி, நெய்வேலி நிலக்கரி நிறுவனம் தனியார் மயம் ஆகாது என்று வைகோவிடம் பிரதமர் உறுதி அளித்து விட்டார் என்று செய்தி வந்திருந்தது.

பெரியார் மையம் இடிக்கப்பட்டபோது, அதைக் கேள்விப் பட்டு கண்ணீரும் கம்பலையுமாக ஆசிரியர் வீரமணி என்னிடம் வந்தபோது, அதே பிரதமர் வாஜ்பாய் அவர்களிடம் அவரை அழைத்துச் சென்று, உங்கள் வடநாட்டுத் தலைவர்களான திலகர், நேரு, படேல், ஆசாத் என்று அவர்களின் பெயரை எங்கள் தெருக்களுக்கு சூட்டியிருக்கிறோம். எங்கள் வீரத் தலைவர்கள் பெயர்களை இந்த டெல்லிப் பட்டணத்தில் சூட்டியது உண்டா? நாங்கள் திராவிட நாடு கேட்டவர்கள். திராவிடர் கழகம் தேர்தலில் போட்டியிடாது. எங்களை மீண்டும் அங்கே கொண்டு சென்று தள்ளிவிடாதீர்கள் என்று வாஜ்பாய் அவர்களிடம் கூறினேன்.

பதட்டப்படாதீர்கள் என்று பிரதமர் வாஜ்பாய் கூறிவிட்டு, துறை அமைச்சரை அழைத்தார். வீரமணியும், வைகோவும் வருகிறார்கள். அவர்கள் கேட்கின்ற இடத்தில் பெரியார் மையம் தொடங்க அனுமதி கொடுங்கள் என்று கூறினார். முன்பைவிட 100 மடங்கு வசதியான இடத்தைப் பெற்றுக் கொடுத் தவன் இந்த வைகோ.

ஹைட்ரோ கார்பன் திட்டம் வரக்கூடாது என்று ஊர் ஊராகச் சென்று கொடி கட்டாமல், கட்சி பெயரைச் சொல்லாமல் தஞ்சை மண்டலத்து மக்களைத் தட்டி எழுப்பினேன். மேகதாட்டு அணை வரப்போகிறது என்று 2012 இல் முதன் முதலாக போராட்டம் நடத்தியவன் இந்த வைகோதான்.

ஒன்றிய அரசின் தூண்டுதலின் பெயரில் கர்நாடக அரசு மேகதாட்டில் அணை கட்ட முயற்சித்திருக் கிறது. 2014 இல் டிசம்பர் 07, 08 தேதிகளில் ஒரு சதித் திட்டம் நடைபெற்றது. இந்து ஏடு முதல் பக்கத்தில் செய்தி வெளியிட்டது. இரண்டு நாட்கள் நடைபெற்ற சதி கூட்டத்தில் கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்த எம்.பி.க்கள். அமைச்சர்கள், எம்.எல்.ஏ.க்கள் கலந்து கொண்டார்கள். சுற்றுச்சூழல் அமைச்சர் பிரகாஷ் ஜவடேகர், ஒன்றிய அரசு வெளிப்படையாக அனுமதி கொடுக்காது. தமிழ்நாடு எதிர்க்கும். எனவே நீங்கள் அணை கட்டுவதற்கான பணிகளைத் தொடங்குங்கள் என்று கூறினார். இதை இந்து ஏடு செய்தியாக வெளியிட்டது.

இந்தச் செய்தியைக் குறிப்பிட்டு காவிரி டெல்டா பகுதியில் ஊர் ஊராகச் சென்று மக்களைத் தட்டி எழுப்பினேன். மேகதாட்டில் அணை கட்டப் போகிறான். ஒன்றிய அரசுதான் இதில் முதல் வில்லன். கர்நாடக அரசை ஊக்குவித்து அணை கட்டச் சொல்வதே ஒன்றிய அரசுதான். ஒன்றிய அரசுதான் நயவஞ்சகம் செய்கிறது; தமிழ்நாட்டுக்குக் கேடு செய்கிறது.

ஈழத் தமிழர்களைக் கொன்று குவித்த கொலைகாரப் பாவியை நீங்கள் ஏன் உங்களது பதவியேற்பு விழாவுக்கு அழைத்தீர்கள் என்று மோடியிடம் எச்சரித்து விட்டு கூட்டணியை விட்டு வெளியே வந்தேன்.

கூட்டணி மாறுகிறவன் என்று எங்களை விமர்சிக் கிறார்கள். மோடியோடு கூட்டணியில்தான் இருந் தேன். கொலைகாரப் பாவியை அழைத்ததன் மூலம் தமிழர்களாகிய எங்கள் நெஞ்சில் குத்திவிட்டீர்கள். அவனுக்குக் கொடுத்த அழைப்பை நீங்கள் திரும்பப் பெறாவிட்டால் உங்களுடன் இருந்து கூட்டணியை விட்டு வெளியேறுவது மட்டுமல்ல, பதவிப் பிரமாணம் எடுக்கின்ற போது ஆயிரம் பேருடன் ஜந்தர் மந்தரில் நான் கருப்புக் கொடி காட்டுவேன் என்று கூறினேன். மோடி பிரதமராக பதவி ஏற்றபோது இந்தியாவிலேயே கருப்புக் கொடி காட்டிய ஒரே ஒரு கட்சி மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம் மட்டும்தான்.

கருப்புக் கொடி காட்டினேன், கைது செய்யப்பட்டேன். அந்த நிமிடமே கூட்டணியை தூக்கி எறிந்துவிட்டு வந்தேன். நான் பதவிகளுக்காக வாழ்கிறவன் அல்ல, காலியாக உள்ள ஒரு சட்டமன்றத் தொகுதியில் வைகோ நின்று அமைச்சராக வேண்டும் என்று ஆசைப்படுகிறார் என சில பேர் எழுதுகிறார்கள். அட அறிவுகெட்டவர்களே, ஒன்றியத்தில் கேபினெட் அமைச்சர் பதவி தருகிறேன் என்று வாஜ்பாய் வற்புறுத்தியபோது, எனக்கு வேண்டாம் என்று கூறிவிட்டு வந்தவன் நான்.

திருச்சி எம்.பி.யை ராஜினாமா செய்யச் சொல்லி, எம்.எல்.ஏ. ஆக்கி அமைச்சராக்கத் திட்டம்; இது மற்றொரு ஊகம். எந்த சுயநலத்திற்கும் நான் ஆசைப்பட்டது இல்லை. என் கரங்கள் கறை படியாதவை என்பதை இயற்கை சொல்லும். என் மீது பழி தூற்றலாம். கோடி கோடியாக வாங்கிக் குவித்துவிட்டான் என்று நா கூசாமல் சொல்லலாம்.

தன்னெஞ்சறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்னெஞ்சே தன்னைச் சுடும்

என்பதைப் போல, என் வாழ்க்கையில் நேர்மையை இந்த நிமிடம் வரை காத்திருக்கிறேன். அதை சாகின்ற வரையும் காப்பாற்றுவேன். நான் நேர்மை தவறியது கிடையாது. நாணயம் தவறியது கிடையாது. நான் நேர்மையோடும், நாணயத் தோடும்தான் பாடுபட்டு வந்திருக்கிறேன். சிறை வாசங்களை ஏற்றிருக்கிறேன். துன்பங்களைச் சந்தித்திருக்கிறேன். கடுமையான விமர்சனங்கள், கடுமையான பழிச் சொற்கள் அனைத்தையும் நான் புன்முறுவலோடு ஏற்றுக் கொண்டவன் நான்.

பத்திரிக்கையாளர்களுக்குச் சொல்வேன், பொடா சட்ட மசோதா விவாதத்திற்கு வந்தபோது, பத்திரிக்கையாளர்களையும் கைது செய்து சிறையில் தள்ளுகின்ற பிரிவு அதில் இருந்தது. வாஜ்பாய், அத்வானி ஆகியோரைச் சந்தித்து, நெருக்கடி காலத்தில் நீங்கள் இருண்ட சிறைகளில் இருந்தீர்கள். நீங்களா இந்தப் பொடா சட்டத்தைக் கொண்டு வருவது? கூடாது. அதில் பத்திரிக்கை யாளர்களைக் கைது செய்வதற்கு ஒரு பிரிவு இருக்கிறது. இதைவிட அக்கிரமம் உண்டா? என்ற கேட்டவுடன், உடனே நாங்கள் அதை நீக்குகிறோம் என்றார்கள்.

மறுநாள் இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிக்கை, பத்திரிக்கையாளர்களைப் பாதுகாத்துக் கொடுத்த வைகோ என்று எழுதியது.

நக்கீரன் கோபால் கைது செய்யப்பட்டார் என்ற வுடன், காவல் நிலையத்தை முற்றுகையிட்டு சிறை சென்றேன்.

எந்த ஊருக்குச் சென்றாலும் பத்திரிக்கையாளர்களை மரியாதை கொடுத்து நடத்துவது என்னுடைய வழக்கம். ஜனநாயகத்தின் விழிகள் அவர்கள்தான். ஜனநாயகத்தின் செவிகள் அவர்கள்தான். அவர்கள் தான் இந்த ஜனநாயகத்தைப் பாதுகாக்கின்றவர்கள்.

இந்த ஸ்டெர்லைட் நச்சு ஆலை புதிய வடிவம் எடுத்து, பசுமைத் தாமிரம் என்ற பெயரில் கொண்டுவரப் பார்க்கிறது. தூத்துக்குடி வட்டார மக்களுக்கு ஆசை வார்த்தைகள் காட்டிவிட்டார்கள். பலியானவர்களுக்கு என்ன பதில் சொல்லப் போகிறீர்கள். துப்பாக்கிச் சூடு நடைபெற்ற மூன்று மணி நேரத்திற்குள் தூத்துக்குடி நகரத்திற்குள் வந்தவன் அடியேன் வைகோதான். ஸ்னோலின் தாயார், நீங்கள்தான் முதலில் எங்கள் வீட்டிற்கு வந்திருக்கிறீர்கள் என்று கூறினார். ஜான்சி வீட்டில் கதறி அழுதார்கள். பாதிக்கப்பட்டவர்களின் ஒவ்வொரு வீட்டிற்கும் இரண்டு மணி வரை சென்று பார்த்துவிட்டு வந்தேன். அன்றைய இரவிலேயே வந்தவர்தான் இன்றைய முதலமைச்சர் மாண்புமிகு ஜோசப் விஜய் அவர்கள். அன்று இரவு 11 மணிக்கு ஸ்னோலின் வீட்டிற்கு வந்தார். அதை ஹென்றி திபேன் நினைவூட்டினார். கொல்லப்பட்டவர்களின் வீடுகளுக்கு வந்து, அவர்களின் கண்ணீரில் பங்கேற் றீர்களே? அந்தக் கொலைகாரர்களை கூண்டிலே நிறுத்துங்கள். அந்தக் கொலைகாரர்கள் மீது வழக்குத் தொடுங்கள். அப்பாவி மக்கள் 101 பேர் மீது போடப்பட்ட வழக்கை இரத்து செய்யுங்கள்.

ஹென்றி திபேன் கேட்டுக் கொண்டதை வரிக்கு வரி வைகோ வழிமொழிகிறேன் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**கழகப் பொதுச்செயலாளர் வைகோ அவர்கள் இவ்வாறு உரையாற்றினார்.**

# கோவில்பட்டி நகராட்சிக்கு உட்பட்ட மூன்று இடங்களில் துரை வைகோ எம்.பி., நேரடி ஆய்வு

தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டி நகர்மன்றத் தலைவர் ஆர்.எஸ்.ரமேஷ் அவர்களின் அழைப்பின் பேரில், 25.06.2026 அன்று காலை 9:30 மணி முதல் 11:30 மணி வரை சுமார் இரண்டு மணி நேரம், மக்களின் நலன் கருதி கோவில்பட்டி நகராட்சிக்கு உட்பட்ட மூன்று முக்கிய இடங்களில் துரை வைகோ எம்.பி., நேரடி ஆய்வு மேற்கொண்டார்.





முதல் ஆய்வு - கோவில்பட்டி அரசு மருத்துவமனை வளாகம்:

கோவில்பட்டியில் அமைந்துள்ள தூத்துக்குடி மாவட்ட மருத்துவமனையை விரிவாகப் பார்வையிட்டார்.

413 படுக்கை வசதியுடன் செயல்பட்டு வரும் இந்த மருத்துவமனையில் கூடுதல் 50 படுக்கைகள் ஏற்கனவே சேர்க்கப்பட்டுள்ளன. மேலும் 25,000 சதுர அடியில் ஐந்து மாடி புதிய வளாகம் அமையவுள்ளதால், விரைவில் சுமார் 500 க்கும் மேற்பட்ட படுக்கை வசதிகளுடன் கோவில்பட்டி மாவட்ட மருத்துவமனை தன்னிறைவு பெற உள்ளது.

ஆனால் அங்கு பல முக்கிய குறைபாடுகள் உள்ளதை ஆய்வில் கண்டும் கேட்டும் துரை வைகோ எம்.பி., அறிந்தார்.

மருத்துவமனைக்குள் உள்ள உள் சாலைகள் பல வருடங்களாகப் பராமரிப்பின்றி மிகவும் சேதமடைந்துள்ளன. கடந்த ஐந்தாண்டுகளுக்கு முன்பே கோரிக்கை வைத்தும், இன்னும் சாலை அமைக்கப்படவில்லை. மருத்துவப் பயனாளிகள், அவர்களின் உறவினர்கள் மற்றும் மருத்துவப் பணியாளர்கள் பெரும் சிரமத்தை எதிர்கொள்கின்றனர். Stretcher படுக்கை வண்டியில் அழைத்துச் செல்லப்படும் மருத்துவ பயனாளர்கள் பெரிதும் வலியை உணர்கின்றனர்.

- இதயவியல் (Cardiology), சிறுநீரகவியல் (Nephrology), நரம்பியல் (Neurology) துறை மருத்துவர்கள் நிரந்தரமாக இல்லை. தற்போது நரம்பியல் மருத்துவர் மாற்றப்படும் நிலையில் உள்ளார்.

- மாற்றுத்திறனாளிகள் மறுவாழ்வு மையத்தில் வாதநோய், விபத்தில் உறுப்புகள் செயலிழப்பு, தன்னிலை குன்றியவர்கள் (Autism) ஆகியோருக்கான பேச்சு சிகிச்சையாளர் (Speech Therapist), occupational Therapist ஆகியோர் நிரந்தரமாக நியமிக்கப்பட வேண்டும்.

- தமிழ்நாட்டிலேயே அதிக Dialysis எனப்படும் சிறுநீரகச் சுத்திகரிப்பு செய்யப்படும் மருத்துவமனைகளில் ஒன்றான இங்கு 8 கருவிகள் மட்டுமே உள்ளன. அதில் 7 பொதுவாகவும், ஒன்று தொற்றுள்ளவருக்காகவும் பயன்பாட்டில் உள்ளது. எனினும் கூடுதல் டயாலிசிஸ் கருவிகள் தேவை.

- 2022-இல் தனது கோரிக்கையின் பேரில் ஒதுக்கப்பட்ட MRI மெஷின் இன்னும் நிறுவப்படவில்லை.

- மாற்றுத்திறனாளிகள் மறுவாழ்வு மைய ஊழியர்களுக்கு இரண்டு மாத சம்பளம் இன்னும் வழங்கப்படவில்லை. இந்த ஆய்வில் மேற்கண்ட நிலைகளை, தேவைகளை துரை வைகோ எம்.பி., தெரிந்து கொண்டார்.

இரண்டாவது ஆய்வு - அரசு அலுவலக வளாகம் (வார்டு 21):

கோவில்பட்டி நகராட்சி வார்டு எண்.21-இல் அமைந்துள்ள அரசு அலுவலக வளாகத்தில் துணை ஆட்சியர் அலுவலகம், BSNL, அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி, நீதிமன்றம், வட்டாட்சியர் அலுவலகம், காவல்துறை அலுவலகம், சிறைச் சாலை உள்ளிட்ட பல்வேறு அரசு அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன. இங்கு தினசரி நூற்றுக்கணக்கான பொதுமக்களும், மாணவ, மாணவிகளும் வருகை தருகின்றனர். ஆனால் வளாகத்திற்குள் உள்ள சாலைகள் 10 ஆண்டு களாக மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளதையும் துரை வைகோ எம்.பி., தெரிந்து கொண்டார்.

மூன்றாவது ஆய்வு - 12 கிராமங்களை இணைக்கும் மந்திதோப்பு சாலை:

கோவில்பட்டியைச் சுற்றிய 12 கிராமங்களை இணைக்கும் மந்திதோப்பு சாலை மிகவும் குறுகலாகவும், 10 ஆண்டுகளுக்கும் மேலாகப் பராமரிப்பின்றியும் உள்ளது. இந்த சாலையைப் பயன்படுத்தும் மக்கள் பெரும் சிரமத்தை எதிர்கொள் கின்றனர். தரமான சாலை வசதி அமைக்க வேண்டும் என்ற மக்களின் நியாய மான கோரிக்கையை துரை வைகோ எம்.பி., பெற்றுக் கொண்டார்.

இந்த மூன்று ஆய்வுகளின் போதும் கோவில்பட்டி (Municipal Commissioner) நகராட்சி ஆணையர் உடன் இருந்தார்.

இந்த மூன்று முக்கிய ஆய்வுகளில் பெறப்பட்ட கோரிக்கைகளையும் தனித் தனியாகத் தொகுத்து, பொதுப்பணித் துறை அமைச்சர் மற்றும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் ஆகிய இரு அமைச்சர்களையும் சந்தித்து விரைவில் வலியுறுத்தி, உரிய நடவடிக்கை எடுக்கக் கோரிக்கை வைக்க உள்ளதாக துரை வைகோ எம்.பி., தெரிவித்தார்.

கோவில்பட்டி மக்களின் வாழ்வாதாரம் மேம்படவும், அடிப்படை வசதிகளை உறுதி செய்யவும் கோவில்பட்டி நகர்மன்றத் தலைவர் ஆர்.எஸ்.ரமேஷ் அவர்களுக்கு உறுதுணையாக இணைந்து தொடர்ந்து செயல்படுவேன் என்றும் கூறினார்.

# சேலம் வ.கோபால்ராசு இல்ல மணவிழா துரை வைகோ எம்.பி., பங்கேற்று வாழ்த்தினார்

சேலம் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் சகோதரர் வ.கோபால்ராசு அவர்களின் மகள் கோ.ஆதிரை - இரா.கணேஷ்பாண்டி ஆகியோரது திருமண வரவேற்பு விழா 29.06.2026 அன்று காலை 11 மணியளவில் ஆத்தூர், நரசிங்கபுரம், சிவசக்தி திருமண மண்டபத்தில் இனிதே நடைபெற்றது. விழாவில் கலந்து கொண்டு, மணமக்கள் இணை பிரியாமல் அனைத்து செல்வங்களையும் பெற்று நீடூழி வாழ துரை வைகோ எம்.பி., வாழ்த்தினார்.



கழக பொருளாளர் மு.செந்திலதிபன், துணைப் பொதுச்செயலாளர் சு.ஜீவன், தலைமைக் கழகச் செயலாளர் ஆ.வந்தியத்தேவன், இளைஞரணி செயலாளர் ப.த.ஆசைத்தம்பி, மகளிரணி செயலாளர் மல்லிகா தயாளன், மாவட்டக் கழகச் செயலாளர்கள் ந.மகேந்திரவர்மன், லிபியா ஆர்.சந்திரசேகர், கே.கே. கணேசன், சேகர், நா.முருகன், சோ.வீரக்குமாரன், மாவை மகேந்திரன், டி.டி.சி.சேரன், எஸ்.ஜெயசீலன், க.இராமநாதன், கோ.இராமதாஸ் மற்றும் என்.எஸ்.இரங்கசாமி, வழக்கறிஞர் பழனிச்சாமி, கொடுமுடி சண்முகம், பி.எஸ். சுப்ரமணியன், பொன்சேதுபதி, கோவி அசோகன், இராமு, தங்கநெடுமாறன், சந்திரன், எம்.ஆர்.செல்வராஜ், சி.பாலு, பி.செல்வகுமார், சுப.செல்வகுமார், பி.ஜெயராமன், இராமராஜ், கு.கலைவாணன், என்.பி.வெங்கடேசன், முத்துசாமி, பி.இரவிச்சந்திரன், டி.எஸ்.சுப்ரமணி, கே.எஸ்.செல்லபாப்பு உட்பட மாவட்டக் கழக நிர்வாகிகள், தோழர்கள் கலந்து கொண்டனர்.



29.06.2026 அன்று காலை சேலம் மாவட்டக் கழகச் செயலாளர் கோபால்ராசு அவர்களின் இல்ல திருமண வரவேற்பு விழாவிற்கு செல்லும் வழியில், பெரம்பலூர் மாவட்ட எல்லையில், துரை வைகோ அவர்களை கழகத் தோழர்கள் பட்டாடை அணிவித்து வரவேற்றனர்.

பெரம்பலூர் மாவட்டக் கழகச் செயலாளர் ஜெயசீலன், அரியலூர் மாவட்டக் கழகச் செயலாளர் இராமநாதன், அரசியல் ஆய்வு மைய உறுப்பினர் துரைராஜ், மாநில விவசாய அணி செயலாளர் வாரணவாசி இராஜேந்திரன் மற்றும் ஏராளமான கழக தோழர்கள் கலந்து கொண்டனர்.

பெரம்பலூர் தொகுதி தவெக சட்டமன்ற உறுப்பினர் கே.சிவக்குமார் அவர்களும் கலந்து கொண்டு துரை வைகோ எம்.பி., அவர்களை வரவேற்று சிறப்பித்தார். அப்போது, அவரது தேர்தல் வெற்றிக்கு தனது வாழ்த்துகளை தெரிவித்துக் கொண்டார்.

'பொங்கு தமிழர்க்கு இன்னல் விளைத்தால்
சங்காரம் நிஜமெனச் சங்கே முழங்கு!'

சங்கொலி

திருவள்ளுவர் ஆண்டு 2057 ஆடி 01 17.07.2026 மலர் 31 இதழ் 29

தலையங்கம்

# அணுக்கனிம சுரங்கம் – ஆபத்து

**க**ன்னியாகுமரியில் இயங்கிவரும் ஐ.ஆர்.இ.எல். நிறுவனம் (Indian Rare Earths Limited) கிள்ளியூர் தாலுகாவிற்குட்பட்ட கீழ்மிடாலம், மிடாலம், இனயம், புத்தன்துறை, ஏழுதேசம், கொல்லங்கோடு ஆகிய கிராமங்களில் அணுக் கனிம சுரங்கங்களை அமைக்கத் திட்டமிட்டுள்ளது.

இதற்கான சுற்றுச்சூழல் அனுமதி மற்றும் கடற்கரை ஒழுங்காற்று மண்டல அனுமதிகோரி ஏற்கனவே விண்ணப்பிக்கப்பட்டிருக்கும் நிலையில் 2024 அக்டோபர் 1 ஆம் தேதி இத்திட்டத்திற்கான பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டம் கன்னியாகுமரி மாவட்டம் தக்கலையில் உள்ள வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் வைத்து நடைபெறும் என அறிவிக்கப்பட்டது.

இந்திய சட்டங்கள் கனிமங்களை பலவகையில் வகைப்படுத்துகின்றன. அணுக்கதிரியக்க தன்மையுடைய கனிமங்கள் தொடர்பான செயல்பாடுகளை அணுசக்தி சட்டவிதிகள், 1984, [Atomic Energy (Working of the Mines, Minerals, and Handling of Prescribed Substances) Rules, 1984 கட்டுப்படுத்துகின்றன. அதன்படி, மோனசைட், சிர்கான், இல்மனைட், ரூட்டைல், சிலிமனைட், லூகாக்ஸின் மற்றும் கார்னெட் ஆகிய அணுக்கதிரியக்க கனிமங்களை இச்சட்டம் கட்டுப்படுத்துகிறது.

இதில், மோனசைட் என்பது மேற்கூறிய அணுசக்தி சட்டவிதிகள்படி Prescribed Substance ஆகும். மோனசைட் உள்ளடக்கிய கனிம படிமத்தினை அகழ்வு செய்வதற்கும், அதனைக் கையாள்வதற்கும், மத்திய பொதுத்துறை நிறுவனமான ஐ.ஆர்.இ.எல்-க்கு மட்டுமே அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இந்திய அணு சக்தித்துறை கன்னியாகுமரி மாவட்டத்தில் மோனசைட் கனிமம் மிகுந்த 1144.0618 ஹெக்டர் பரப்பிலான பகுதிகளில் சுரங்கம் அமைக்க தமிழ்நாடு அரசின் இசைவையும், மத்திய சுரங்க அமைச்சக அனுமதியினையும் பெற்றுள்ளது. கிள்ளியூர் தாலுகாவில் உள்ள கீழ்மிடலாம், மிடாலம், இனயம், புத்தன்துறை, ஏழுதேசம், கொல்லன்கோடு ஆகிய பகுதிகளில் அணுக் கனிமங்களை அகழ்ந்தெடுக்க ஒன்றிய அரசு திட்டமிட்டுள்ளது.

இத்திட்டம் அமைய இருக்கும் மொத்தப் பரப்பளவான 1144.0618 ஹெக்டேரில் 353.4876 ஹெக்டேர் பாதுகாக்கப்பட்ட கடலோர மண்டலத்தின் கீழ் வருகிறது. சுமார் 59.88 மில்லியன் டன் அளவிலான அணுக் கனிமங்கள் வெட்டியெடுக்கப் படலாம் என அனுமானிக்கப்பட்டுள்ளது. அகழ்விக்கக்கூடிய கனிம படிமத்தில், அணுக் கனிமங்களின் அளவு 10% முதல் 22% வரை உள்ளது. இதனடிப்படையில், புதிய சுரங்க குத்தகை மூலம் ஆண்டுக்கு 1.5 மில்லியன் டன்கள் என்ற விதத்தில் ஏறத்தாழ 40 ஆண்டுகளுக்கு மணவாளக்குறிச்சி ஆலைக்குத் தேவையான மூலப் பொருள்கள் அகழ்ந்தெடுக்கப்படும் என ஐ.ஆர்.இ.எல். நிறுவனம் தெரிவித்து உள்ளது.

இத்திட்டம் அமையவிருக்கும் இடம் இயற்கையாகவே அதிக கதிரியக்க தன்மை உடைய பகுதிகளாகும். இந்த நிலையில் அணுக் கனிமங்கள் அகழ்ந்தெடுக்கப் பட்டால், அணுக்கதிரியக்க பாதிப்புகள் அதிகரிக்கக்கூடும்.

நெல்லை, தூத்துக்குடி, குமரி மாவட்டத்தில் உள்ள 75 கடலோரக் கிராமங்களில் ஏறத்தாழ 50 கிராமங்கள் ஏற்கெனவே தாதுமணல் கொள்ளையால் பாதிப் படைந்துள்ளன. குமரி முதல் தூத்துக்குடி வரை நடந்தே செல்லக்கூடியதாக இருந்த கடற்கரையின் நிலை மாறி, இன்று பல கிராமங்களில் கடற்கரையே இல்லாமல் போய்விட்டது. கடலோரங்களில் இருந்த மணற்குன்றுகள் அழிக்கப் பட்டுவிட்டன. இதனால் கடலரிப்பு அதிகமாகிவிட்டது.

கடல்நீர் உட்புகுந்து நிலத்தடி நீர் உப்பாகிவிட்டது. கடற்கரையும் கடலோரத் தாவரங்களும் அழிக்கப்பட்டதால் இனப்பெருக்கத்திற்காக நிலத்தையும் உணவிற்காகக் கடலையும் நம்பி வாழும் இருவாழ்விகளான ஆமைகள் இக் கடலோரத்தின் பல பகுதிகளுக்கு வந்து முட்டையிடுவதை நிறுத்திவிட்டன. கடற்கரையின் வளம் அழிக்கப்பட்டால் அது ஆழமற்ற கடல் பகுதியின் வளத்தையும் அழித்துவிடும்.

இந்த நிலையில் இத்திட்டம் அனுமதிக்கப்பட்டால் பாதிப்புகள் இன்னும் பன்மடங்கு உயர கூடும்.

கன்னியாகுமரி, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் ஏற்கெனவே நடைபெற்ற தாதுமணல் கொள்ளையால் மீனவ கிராமங்களில் வசிக்கும் பலருக்கும் புற்றுநோய், சிறுநீரகப் பாதிப்பு, தைராய்டு, மலட்டுத் தன்மை, தோல்நோய், ஆஸ்துமா, கருச்சிதைவு உள்ளிட்ட பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன. முழுக்க முழுக்க கடற்கரையிலேயே அமர்ந்து கொண்டும், நடந்து கொண்டும் வேலை பார்க்கும் மீனவர்களுக்கு கதிரியக்கம் நிறைந்த மணற்பகுதியை அகழ்வதால் கதிரியக்க பாதிப்பு அதிகம் நேர்கிறது. கூத்தன்குழி, மணவாளக்குறிச்சி ஆகிய பகுதிகளில் மூளை வளர்ச்சி குன்றிய குழந்தைகள் அதிகம் பேர் இருப்பதாக அப்பகுதி மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

தென்மாவட்ட கடற்கரைப் பகுதிகள் புவி வெப்பமயமாதலால் உந்தப்பட்ட காலநிலை மாற்றத்தாலும் அறிவியலுக்குப் புறம்பான மனித செயல்பாடுகளாலும் வேகமாக அரிப்புக்குள்ளாகி வருகிறது. ஒன்றிய புவி அறிவியல் துறையின் ஆய்வறிக்கையின்படி கன்னியாகுமரி மாவட்டத்தின் 69.06 கி.மீ. கடற்கரை நீளத்தில் 44.56 கி.மீ. கடற்கரை அரிப்புக்குள்ளாகி வருவதாகத் தெரியவந்துள்ளது. குறிப்பாக இனயம், புத்தன்துறை, மிடாலம், மணவாளக்குறிச்சி உள்ளிட்ட கிராமங்களின் கடற்கரைகளில் கடலரிப்பு தீவிரமாக நடைபெற்று வருவதாக இந்த ஆய்வறிக்கை குறிப்பிடுகிறது. இப்படியான பகுதிகளில் அணுக் கனிம சுரங்கம் அமைப்பது முற்றிலும் தடை செய்யப்பட வேண்டிய நடவடிக்கையாகும்.

இந்நிலையில் கன்னியாகுமரியில் அணுக்கனிம சுரங்கம் அமைப்பதற்காக மத்திய அரசின் ஐஆர்இஎல் (IREL) நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட நில ஒதுக்கீட்டு ஆணையை ஒரு வருடத்திற்கு நீட்டிப்பதாக கடந்த மாதம் தமிழ்நாடு அரசு அறிவித்திருந்தது.

இது தொடர்பாக தமிழக முதலமைச்சர் விஜய் அவர்களை சந்தித்து மனு ஒன்றை அளித்துள்ளதாக சுற்றுலாத்துறை அமைச்சரும் கன்னியாகுமரி மாவட்ட பொறுப்பு அமைச்சருமான ராஜேஷ்குமார் தெரிவித்துள்ளார்.

"அணுக்கனிம சுரங்கத் திட்டத்திற்காக வழங்கப்பட்ட ஓராண்டு கால நீட்டிப்பு அரசாணையை உடனடியாக மறுபரிசீலனை செய்ய வேண்டும் என முதலமைச்சரிடம் வலியுறுத்தியதாகவும், மக்களைப் பாதிக்கும் திட்டத்தை அரசு அனுமதிக்காது; இந்தக் கோரிக்கையின் மீது நிச்சயமாக உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என முதலமைச்சர் உறுதியளித்து உள்ளதாகவும்" அமைச்சர் ராஜேஷ்குமார் தனது சமூக ஊடகப் பக்கங்களில் தெரிவித்துள்ளார். ●

# வடசென்னை கிழக்கு மாவட்ட நிர்வாகிகள் கூட்டம்

**வ**டசென்னை கிழக்கு மாவட்ட நிர்வாகிகள் கூட்டம் தலைமைக் கழகம் தாயகத்தில் 05.07.2026 அன்று மாவட்ட அவைத்தலைவர் பூங்கா ஆர்.இராமதாஸ் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மாவட்டத் துணைச் செயலாளர் வில்பிரட் வரவேற்புரை ஆற்றினார்.

சிறப்பு அழைப்பாளர்களாக கழக துணைப் பொதுச்செயலாளர் சு.ஜீவன் எம்.சி., அவர்களும், தலைமைக் கழகச் செயலாளர் ஆ.வந்தியத்தேவன் அவர்களும், அமைப்புச் செயலாளர் சு.குருநாதன் அவர்களும் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார்கள்.

கூட்டத்தின் நோக்கம் குறித்து மாவட்டப் பொறுப்பாளர் தென்றல் நிசார் விளக்கி உரை ஆற்றினார்.

நிகழ்ச்சியில் துணைச் செயலாளர்கள் இராம.கிருபாகரன், சுரேஷ்பாபு, லட்சுமி ஜீவா, பகுதிச் செயலாளர்கள் துறைமுகம் எம்.இ.நாசர், திரு.வி.க. நகர் எஸ்.கிரி, தலைமை செயற்குழு உறுப்பினர் கோவில்பட்டி இராமச்சந்திரன், பொதுக்குழு உறுப்பினர் த.செல்லப்பாண்டி மற்றும் வட்டக் கழகச் செயலாளர்கள் பங்கேற்றனர்.




கூட்டத்தில் வருகிற ஜூலை 17 சங்கொலி 30 ஆம் ஆண்டு நிறைவு விழா குறித்தும், டெல்லியில் தலைவர் வைகோ அவர்களின் புத்தக வெளியீட்டு விழாவில் கலந்து கொள்வது குறித்தும், செப்டம்பர் 15, அண்ணா பிறந்தநாள் விழா மாநாட்டுக்கான சுவர் விளம்பரம் குறித்தும், செப்டம்பர் 22, தலைவர் வைகோ அவர்கள் பிறந்தநாள் விழா குறித்தும் ஆலோசிக்கப்பட்டது.

# திருச்சியில் பல்வேறு நலத்திட்ட பணிகள் துரை வைகோ எம்.பி., தொடங்கி வைத்தார்!

## அமைச்சர் ரமேஷ் அவர்களும் நிகழ்ச்சியில் பங்கேற்றார்











மக்களின் வாழ்வில் மாற்றத்தை உருவாக்கும் வளர்ச்சித் திட்டங்கள் மட்டுமல்ல, அவர்களின் அன்றாடத் தேவைகளை பூர்த்தி செய்யும் மக்கள் நலப் பணிகள் மற்றும் அடிப்படை கட்டமைப்பு வசதிகளும், மக்கள் பணிக்கான அரசியலின் உண்மையான வெற்றியாக கருதும் துரை வைகோ எம்.பி., அவர்கள், 12.06.2026 அன்று திருச்சி நாடாளுமன்ற தொகுதியில், 2025-2026 ஆம் ஆண்டு தனது தொகுதி மேம்பாட்டு நிதி மொத்தம் ஒரு கோடியே 56 இலட்சத்து 65 ஆயிரம் ரூபாய் மதிப்பிலும், தலைவர் வைகோ அவர்களின் மாநிலங்களவை உறுப்பினர் நிதி ரூ.29 இலட்சம் மதிப்பிலும் கட்டப்பட்ட பல்வேறு திட்டங்களை மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கும் நிகழ்ச்சிகளில் பங்கேற்று சிறப்பித்தார்.

திருவரங்கம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ஜீயபுரம் மற்றும் அம்மன்குடி ஆகிய இரு இடங்களின் நடைபெற்ற நிகழ்ச்சியில் அத்தொகுதியின் சட்டமன்ற உறுப்பினரும், மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சருமான சீ.ரமேஷ் அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார். அவருக்கு துரை வைகோ எம்.பி., நன்றி தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட அலுவலர் திருமதி T.ஸ்வாதிஸ்ரீ இ.ஆ.ப, அவர்கள் கழகத் துணைப் பொதுச் செயலாளர் டாக்டர் ரொஹையா, திருச்சி மாநகர் மாவட்ட செயலாளர் வெல்லமண்டி.சோமு, திருச்சி தெற்கு மாவட்ட செயலாளர் மணவை தமிழ்மாணிக்கம் மற்றும் மாநில மாவட்ட பொறுப்பாளர்கள் அரசு அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

முதல் நிகழ்வாக, காலை 8:30 மணிக்கு, திருச்சி மேற்கு சட்டமன்ற தொகுதிக் குட்பட்ட, திருச்சி மாநகராட்சி 54வது வார்டு வேடுவர் தெருவில் ரூ.17 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்ட அங்கன்வாடி மையக் கட்டடத்தை திறந்து வைத்து துரை வைகோ எம்.பி., மக்கள் பயன்பாட்டிற்கு வழங்கினார்.

அதன் பின்பு, காலை 9 மணியளவில், திருச்சி கிழக்கு சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட, 20வது வார்டு பூலோகநாதர் கோவில் தெருவில் ரூ.17 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்ட நியாயவிலைக் கடையை திறந்து வைத்தார்.

பிறகு, காலை 9:30 மணியளவில், திருச்சி கிழக்கு சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட 15வது வார்டு சஞ்சீவி நகர் பகுதியில் ரூ.17 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்ட நியாய விலைக் கடையை திறந்து வைத்தார்.

அதனைத் தொடர்ந்து காலை 10:30 மணியளவில், திருவெறும்பூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கிருஷ்ணசமுத்திரம் ஊராட்சி எழில்நகரில், இயக்க தந்தை தலைவர் வைகோ அவர்களின் மாநிலங்களவை உறுப்பினர் நிதியில் ரூ.29 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்ட 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டி மக்கள் பயன்பாட்டிற்கு அர்ப்பணிக்கப்பட்டது.

காலை 11:30 மணிக்கு, திருவெறும்பூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட குவலக்குடி ஊராட்சியில் உள்ள வீதிவடங்கம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் கல்வி வளர்ச்சிக்கு ரூபாய் 18 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்ட கூடுதல் வகுப்பறை கட்டடத்தை திறந்து வைத்தார்.

நண்பகல் 12 மணிக்கு, திருவெறும்பூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட திருவெறும்பூர் ஊராட்சி ஒன்றியம், குண்டூர் ஊராட்சியில் ரூ.17.80 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்ட அங்கன்வாடி மையமும் திறந்து வைக்கப்பட்டது.

பின்னர் மதியம் 1 மணிக்கு, திருவரங்கம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஜீயபுரத்தில் ரூபாய் 8 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்ட பேருந்து நிழற்கூடம் திறந்து வைக்கப்பட்டது.

பகல் 1:30 மணிக்கு, அந்தநல்லூர் ஒன்றியம் அம்மன்குடியில் ரூ.10.60 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்ட நியாயவிலைக் கடையும் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டது.

மதியம் 2:15 மணிக்கு, மணிகண்டம் ஒன்றியத்தில் சோமரசன்பேட்டையில் உள்ள சித்த மருத்துவமனைக்கு ரூபாய் 2.25 இலட்சம் மதிப்பில் அமைக்கப்பட்ட ஆழ்குழாய் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டது.

மதியம் 2:30 மணிக்கு, நாச்சிக்குறிச்சி ஊராட்சியின் இனியானூரில் ரூ.29 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி திறந்து வைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து மதியம் 3 மணிக்கு, பாகனூர் ஊராட்சியில் ரூ.10 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்ட பல்நோக்குக் கட்டடமும் திறந்து வைக்கப்பட்டது.

இறுதியாக மாலை 4 மணிக்கு, மணப்பாறை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கண்ணுடையான்பட்டி ஊராட்சி சத்திரப்பட்டியில் ரூபாய் 10 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்ட சீரணி அரங்கம் திறந்து வைக்கப்பட்டது.

குழந்தைகளின் கல்வி, ஊட்டச்சத்து மற்றும் வளர்ச்சிக்கான அங்கன்வாடி மையங்கள், மாணவர்களின் கல்வித் தரத்தை மேம்படுத்தும் வகுப்பறைக் கட்டடங்கள், கிராம மக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்யும் நீர்த்தேக்கத் தொட்டிகள், பொதுமக்களின் அத்தியாவசிய தேவைகளுக்கான நியாயவிலைக் கடைகள், சுகாதார வசதிகளை வலுப்படுத்தும் ஆழ்குழாய் திட்டங்கள், மக்கள் பயன்பாட்டிற்கான பேருந்து நிழற்கூடங்கள், பல்நோக்குக் கட்டடங்கள் மற்றும் சீரணி அரங்கங்கள் என ஒவ்வொரு திட்டமும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் நோக்கத்தோடு செயல்படுத்தப்பட்டிருப்பதை நேரில் கண்டு துரை வைகோ எம்.பி., மகிழ்ச்சி அடைந்தார்.

மக்களின் தேவைகளை உணர்ந்து, தொகுதி முழுவதும் வளர்ச்சிப் பணிகளை தொடர்ந்து முன்னெடுத்து வருவதில் மனம் நிறைவடைவதாகவும்; இன்னும் தொடர்வேன் என்றும் துரை வைகோ எம்.பி., கூறினார். ●

# 5493 மின்வாரிய கேங்மேன் பணியாளர்களுக்கு நியமன ஆணை! வைகோ, துரை வைகோ எம்.பி., தொடர் முயற்சி வெற்றி

மறுமலர்ச்சி திமுகவின் தொழிற்சங்கப் பிரிவான மின்வாரிய மறுமலர்ச்சி தொழிலாளர் முன்னணி (MLF) சார்பில், தமிழ்நாடு மின்வாரியத்தில் கேங்மேன் பணியாளர்கள் 5,493 பேருக்கு பணிநியமன ஆணை வழங்கிடவும், ஒப்பந்த பணியாளர்களை அடையாளம் கண்டு நிரந்தரம் செய்திடவும் வேண்டும் என்ற முக்கிய கோரிக்கைகளை வலியுறுத்தி, திருச்சி நாடாளுமன்ற தொகுதி மத்தியப் பேருந்து நிலையம் அருகில் 25.06.2026 அன்று மாபெரும் கவன ஈர்ப்பு பொதுக்கூட்டம் நடைபெற்றது.

அதில் சிறப்புரையாற்றிய துரை வைகோ எம்.பி., அவர்கள், மின்வாரியத்தில் விடுபட்ட 5,493 கேங்மேன் பணியாளர்களுக்கு உடனடியாக பணிநியமன ஆணை வழங்க வேண்டும் மற்றும் நீண்டகால ஒப்பந்தத் தொழிலாளர்களை நிரந்தரப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கைகளை விரிவாக எடுத்துரைத்தார். அவரது உரை வருமாறு:

2019 ஆம் ஆண்டு தேர்வு செய்யப்பட்ட 15,106 பேரில், அதிமுக ஆட்சியில் 9,613 பேருக்கு 02.03.2021 அன்று பணி நியமன ஆணை வழங்கப்பட்ட நிலையில், 5,493 தொழிலாளர்கள் இதுவரை விடுபட்டுள்ளனர்.

இவர்களுக்கு பணி நியமன ஆணை வழங்க வேண்டும் என எங்கள் தொழிற்சங்கம் பல்வேறு நிலைகளில் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. தலைவர் வைகோ அவர்கள் 30.08.2021 அன்று முந்தைய அரசுக்கு கடிதம் எழுதினார்.

எனது அறிவுறுத்தலின்படி, 31.08.2021 அன்று பட்ஜெட் மனுவில் அன்றைய எங்கள் சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் ரகுராமன் அவர்கள் இந்தக் கோரிக்கையை எழுப்பினார். அதேபோல, எனது ஆலோசனையின் படி 07.09.2021 அன்று அன்றைய எங்கள் சட்டமன்ற உறுப்பினர் புதூர் மு. பூமிநாதன் அவர்கள் சட்டமன்றத்தில் இந்த விவகாரத்தை எழுப்பினார். இதன் தொடர்ச்சியாக தனியார் கமிட்டி அமைக்கப்பட்டது.

நான், கடந்த 12.04.2022 மற்றும் 28.12.2022 ஆகிய தேதிகளில் அன்றைய மின்துறை அமைச்சர் செந்தில்பாலாஜி அவர்களை இருமுறை நேரில் சந்தித்து கோரிக்கை வைத்தேன்.

12.04.2023 அன்று சட்டமன்றத்தில் மதிமுக உறுப்பினர் புதூர் பூமிநாதன் அவர்கள் எழுப்பிய கேள்விக்கு "விரைவில் நல்ல தீர்வு" என்று அப்போதைய அமைச்சர் உறுதியளித்தார்.

06.07.2023 அன்று முன்னாள் மின்துறை பொறுப்பு அமைச்சர் தங்கம் தென்னரசு அவர்களை சந்தித்து கோரிக்கை வைத்தார்.

அதன் பிறகு, அன்றைய மின்சாரத்துறை அமைச்சராக பொறுப்பு வகித்த சிவசங்கரன் அவர்களையும் நேரில் சந்தித்து இக்கோரிக்கை குறித்து வலியுறுத்தியதுடன், தேர்தலுக்கு முன்பாகவே பணி ஆணை வழங்கிடுமாறும் கேட்டுக்கொண்டார்.




எழுத்துத் தேர்வு மற்றும் உடற்தகுதித் தேர்வு முறையாக நடத்தப்பட்ட பின்னரும் 5,493 பேர் விடுபட்டுள்ளனர். இவர்களின் குடும்பங்கள் மிகப் பெரிய ஏமாற்றத்திற்கு ஆளாகியுள்ளன. பெரும்பாலானோர் முதல் தலைமுறை அரசுப் பணியாளர்கள் மற்றும் வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள குடும்பங்களைச் சேர்ந்தவர்கள். திருமணங்கள் உள்ளிட்ட சுப நிகழ்வுகள் கூட தடைபட்டுள்ளன.

இதனை கருத்தில் கொண்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் திரு. ஜோசப் விஜய் அவர்களையும், மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் திரு. நிர்மல் குமார் அவர்களையும் சந்தித்து கோரிக்கை வைத்தேன். அப்போதே இருவரும் அதனை ஏற்றுக்கொண்டனர்.

குறிப்பாக, மின்சாரத்துறை அமைச்சர் திரு. நிர்மல்குமார் அவர்களை சந்தித்த போது, அவர் இந்தக் கோரிக்கை அரசு ஏற்கிறது என்றும், உறுதியாக "இவர்களுக்கு பணி வழங்கப்படும்" என்றும் உறுதியளித்தார்.

இன்று அவர் அளித்துள்ள பேட்டியில், "15 ஆயிரம் காலி இடங்களை நிரப்புவ தோடு, விடுபட்ட 5,493 கேங்மேன் பணியாளர்களையும் சேர்த்து 20,493 நியமன ஆணைகளை விரைவில் வெளியிட முதல்வரின் ஒப்புதலைப் பெற்றுவிட்டோம். நிதித் துறையின் ஒப்புதலைப் பெற்றவுடன் அவர்களுக்கு பணியாணை வழங்கப் படும்" என்று அறிவித்துள்ளார்.

இந்த மகிழ்ச்சியான செய்தியைக் கேள்விப்பட்டவுடன் இன்று காலை மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சருக்கு அலைபேசியில் தொடர்பு கொண்டு நன்றி தெரிவித்துக் கொண்டேன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். கவன ஈர்ப்பு பொதுக் கூட்டமாக ஏற்பாடு செய்யப்பட்ட இந்த பொதுக்கூட்டம், நன்றி அறிவிப்பு கூட்டமாக மாறியுள்ளது.

இவ்வாறு துரை வைகோ எம்.பி., உரையாற்றினார்.

●

# வெளிநாடுகளில் சிக்கித் தவித்த தமிழர்களை மீட்டதோடு அவர்களது இல்லங்களுக்கும் சென்று சந்தித்தேன் - துரை வைகோ எம்.பி.,







வெளிநாடுகளில் பல்வேறு காரணங்களால் அவதிக்குள்ளாகி, தாயகம் திரும்ப முடியாமல் சிக்கித் தவிக்கும் தமிழர்களை மீட்டு தாயகம் திரும்பச்செய்யும் பணியில், ஒரு பகுதியாக, சமீபத்தில் எனது முயற்சியால் மீட்டெடுக்கப்பட்ட தோழர்களின் இல்லங்களுக்கு நேற்றும் இன்றும் நேரில் சென்று அவர்களைச் சந்தித்தேன்.

முதலில், தமிழ்நாட்டிலிருந்து துபாய்க்கு எலக்ட்ரீஷியன் பணிக்காகச் சென்று, ஊதியம் வழங்காத நிறுவனத்தால் வீதிக்கு வந்து, உணவுக்கும் உறை விடத்துக்கும் கூட சிரமப்பட்ட விருதுநகர் மாவட்டம் கலிங்கப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த தோழர்கள் அழகுராஜ் மற்றும் இராமசாமி அவர்களின் இல்லத்துக்கு சென்று, அவர்களுடனும், அவர்களது குடும்பத்தினருடனும், ஊர் மக்களுடனும் உரையாடினேன்.

அதன் பின்னர், அதே துபாயிலிருந்து மீட்டெடுக்கப்பட்ட தூத்துக்குடி தெற்கு மாவட்டம் வில்லிசேரி கிராமத்தைச் சேர்ந்த தோழர் பவுன்ராஜ் அவர்களின் இல்லத்திலும், சவலப்பேரி கிராமத்தைச் சேர்ந்த தோழர் கணேசன் அவர்களின் இல்லத்திலும் அவர்களுடனும் ஊர் மக்களுடனும் சந்தித்துப் பேசினேன்.

அப்போது அவர்கள் அனைவரும் ஒரே குரலில், "அந்த இக்கட்டான காலகட்டத்தில் எங்களுக்கு உணவு வழங்கி, தங்க இடம் ஏற்பாடு செய்து கொடுத்து, சட்ட சிக்கல்களை எதிர்கொண்டு, இந்திய ஒன்றிய வெளியுறவுத்துறை அமைச்சகத்தின் கவனத்திற்கு எடுத்துச்சென்று எங்கள் அனைவருக்கும் தற்காலிக பாஸ்போர்ட் வழங்கி மீட்டு தாயகம் அழைத்து வந்து குடும்பத்தினருடம் எங்களை சேர்த்து வைத்த உங்களுக்கு நன்றி" என்று கண்ணீர் மல்க கூறியது என் இப்பணியை நிறைவாக்கியது.

அந்த சந்திப்புகளை முடித்துக் கொண்டு அவர்களுக்கு ஆறுதலும் அறிவுரை களும் வழங்கியதுடன் வேலைக்கு ஏற்பாடு செய்துதர முயற்சிக்கிறேன் என்று கூறிவிட்டு புறப்பட்டேன்.

அதன் பிறகு, மேற்கு ஆப்பிரிக்காவின் மாலி நாட்டில் தீவிரவாதிகளால் கடத்தப் பட்டு, நமது தொடர் முயற்சியால் மீட்டெடுக்கப்பட்ட தூத்துக்குடி தெற்கு மாவட்டம் நாரைக்கிணறு கிராமத்தைச் சேர்ந்த தோழர் பொன்னுதுரை, கொடியங் குளம் கிராமத்தைச் சேர்ந்த தோழர் புதியவன், கடையநல்லூர் கண்மணியாபுரம் பகுதியைச் சேர்ந்த தோழர் தளபதி சுரேஷ் ஆகியோரின் இல்லத்திற்கு சென்று, அவர்களையும் அவரின் குடும்பத்தினரையும், ஊர் மக்களையும் நேரில் சந்தித்து உரையாடினேன்.

தங்கள் உயிருக்கு ஆபத்தான நிலையில் இருந்ததாகவும், நாங்கள் காப்பாற்றப்படு வோமோ இல்லையோ என்ற நிலையில்தான் எங்களை காப்பாற்றி உள்ளீர்கள் என்று கூறிய அவர்களுக்கு ஆறுதல் கூறினேன்.

அப்போது அவர்களிடம் பேசியபோது, முறையான ஒப்பந்தம் இல்லாமலோ, அங்கீகரிக்கப்பட்ட ஏஜென்ட்கள் மூலமாக இல்லாமலோ வெளிநாட்டுக்கு செல்ல வேண்டாம் என அவர்களிடம் வலியுறுத்தினேன்.

மேலும், தங்கள் கிராமங்களில் வெளிநாட்டுக்கு வேலைக்குச் செல்ல ஆர்வ முள்ள இளைஞர்களிடம் இந்த அனுபவங்களைப் பகிர்ந்து, விழிப்புணர்வை ஏற்படுத்துமாறு கேட்டுக்கொண்டேன்.

இதே செய்தியை வெளிநாட்டுக்கு வேலைக்குச் செல்லத் தயாராகும் அனைத்து தமிழ்நாட்டு இளைஞர்களுக்கும் நான் முன்வைக்க விரும்புகிறேன்.

# திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவரையும், மாநகராட்சி ஆணையரையும் துரை வைகோ எம்.பி., சந்தித்து கலந்துரையாடினார்



திருச்சி நாடாளுமன்றத் தொகுதியின், திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவராகப் பொறுப்பேற்றுள்ள திரு. பிரதீக் தயாள், இ.ஆ.ப. அவர்களையும், திருச்சி மாநகராட்சி ஆணையராகப் பொறுப்பேற்றுள்ள திரு. வீர் பிரதாப் சிங், இ.ஆ.ப. அவர்களையும், 17.06.2026 அன்று மாலை 4 மணியளவில் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் சந்தித்து தனது திருச்சி நாடாளுமன்ற தொகுதிக்கு உட்பட்ட கோரிக்கைகள் குறித்து துரை வைகோ எம்.பி., கலந்துரையாடினார்.

அப்போது, மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் மாநகராட்சி ஆணையர் ஆகியோரிடம், ஏற்கனவே கொடுக்கப்பட்டு நிலுவையில் உள்ள கோரிக்கைகளைத் தொகுத்து, கொடுக்கப்பட்ட தேதி வாரியாக குறிப்பிட்டு ஒரு கடிதமாகவும், புதிய கோரிக்கைகளைத் தனித்தனி கடிதங்களாகவும் இருவருக்கும் தனித்தனியே சமர்ப்பித்து, அவை குறித்த அனைத்து விளக்கங்களையும் துரை வைகோ எம்.பி., தெளிவாக எடுத்துரைத்தார். அதன் விவரங்கள் பின்வருமாறு:

மாவட்ட ஆட்சித்தலைவரிடம்,

முக்கியமாக, (1) திருச்சி பன்னாட்டு விமான நிலைய ஓடுதள விரிவாக்கத் திட்டத்திற்குத் தேவையான 7.67 ஏக்கர் நிலத்திற்கான வழிகாட்டி மதிப்பு (GLV) திருத்தம் தொடர்பான தற்போதைய நிலவரத்தை வழங்கக் கோரினார். அதற்காக முதலமைச்சரை சந்தித்து வைத்த கோரிக்கையையும் சுட்டிக்காட்டினார். அதற்கு, ஆட்சித்தலைவர், நிதி அமைச்சகத்திடமிருந்து அறிக்கையை பெற்று தருவதற்கான அனைத்து முயற்சியையும் மேற்கொள்வதாக கூறினார். (2) அதேபோல், திருச்சியில் உலர் துறைமுகம் அமைப்பதற்கான உரிய நிலத்தை மாவட்ட நிர்வாகம் மூலம் ஒதுக்கீடு செய்து தர முதல்வரை கேட்டுக் கொண்டதையும் எடுத்துரைத்தார். அதற்கும், தன் ஆதரவை உறுதியாக வழங்குவதாக கூறினார். (3) துவாக்குடி - பால்பண்ணை அணுகு சாலை அமைக்கும் பணிகளுக்கான நிலமெடுப்பு நடவடிக்கைகள் மற்றும் அது தொடர்பான பணிகள் குறித்து அறிக்கை வழங்கிட கோரினார். அதற்கு, அனைத்து முன்பணிகளையும் முடித்து எதிர்வரும் செப்டம்பர் மாதம் சாலை அமைக்கும் பணிகளை தொடங்கிடுவோம் என்றும், மொத்தம் 9 கிராமத்தில் இரண்டு கிராமங்களுக்கான இழப்பீடு தொகை வழங்கப்பட்டுள்ளதாகவும், மீதமுள்ள 7 கிராமங்களுக்கு விரைவில் இழப்பீடு வழங்கி முடிப்போம் என்றும் விளக்கம் அளித்தார்.

அதனைத் தொடர்ந்து, ஸ்ரீரங்கம் யாத்ரி நிவாஸ் முதல் மேலூர் 37 அடி உயர ஆஞ்சநேயர் கோவில் வழியாக பட்டர்ஃப்ளை பூங்கா வரை உள்ள சேதமடைந்த கொள்ளிடம் வெள்ளக் கரைச் சாலையை அகலப்படுத்தி சீரமைத்துத் தரக் கோருதல், பால்பண்ணை சந்திப்பில் நிலவும் போக்குவரத்து நெரிசலைக் குறைப்ப தற்கான உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கோருதல், பாகலூர் கிராமத்தில் வசித்து வரும் 20 பட்டியலின குடும்பங்களுக்கு நிரந்தர பொது பாதை அமைத்துத் தர நடவடிக்கை எடுக்க கோருதல், திருச்சி வயலூர் சாலை அருகிலுள்ள ஜெயம் நகர் பகுதியில் சுத்தமான குடிநீர், பாதாள சாக்கடை வடிகால் மற்றும் தெருவிளக்கு வசதிகளை மேம்படுத்த கோருதல், திருச்சி மணிகண்டம் நாவலூர் குட்டப்பட்டில் அமைந்துள்ள தனியார் தொழிற்பயிற்சி மாணவர்களுக்கு காவிரி குடிநீர் வழங்குதல் உள்ளிட்ட முக்கிய கோரிக்கைகளை தனிக் கடிதமாகவும்,

திருச்சி ESIC மருத்துவமனை வளாகத்திலுள்ள காலி இடத்தில் ESIC பயன் பாட்டில் தொடரச் செய்ய கோருதல், நவல்பட்டு ஐடி பார்க் பகுதிக்கு உட்பட்ட 100 அடி சாலையில் தெருவிளக்குகள் அமைத்தல் அதே பகுதியில், ELCOT IT Park இடையே உள்ள சாலையை அகலப்படுத்துதல், மணப்பாறை, சித்தாநத்தம் தரைப்பாலத்தை உயர்மேம்பாலமாகக் கட்டுதல், மணிகண்டம், பூங்குன்றர் ஊராட்சியில் நடுமலை வயல்வெளியில் சாலை அமைத்தல், நவல்பட்டு அண்ணா நகர் பகுதி மக்களுக்கு காவிரி கூட்டு குடிநீர் திட்டத்தின் மூலம் குடிநீர் வழங்குதல், திருவரங்கம், திருப்பாய்த்துறை, நந்தவனம் பகுதி மக்களுக்கு மின் இணைப்பு வழங்குதல், தமிழ்நாடு பிரஸ் எம்ப்ளாயீஸ் யூனியன் அமைப்பின் திருச்சியைச் சேர்ந்த பத்திரிக்கையாளர்களுக் கான சலுகை விலை வீட்டு மனைப்பட்டா வழங்குதல், திருவானைக்கோவில், பழைய கல்லணை ரோடு, பொன்னுரங்கபுரம் சேதம் அடைந்துள்ள தரைப் பாலத்தை புதிய பாலமாக புதுப்பித்து தர கோருதல், மணிகண்டம் ஒன்றியம் சுபதம் அவென்யூ பகுதியில் மழை நீர் வடிகால் ஏற்படுத்துதல், அந்தநல்லூர், மருதண்டா குறிச்சி வேப்பூர் சங்கம் நகர் பகுதியில் மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி அமைத்தல், கம்பரசம்பேட்டை, வெள்ளந்தெரு ரயில்வே கேட் பகுதியில் இருந்து பெருமாள் கோயில் வரை உள்ள சாலையை சீரமைத்துத் தருதல் ஆகிய நிலுவையிலுள்ள கோரிக்கைகளை அது வழங்கப்பட்ட தேதிவாரியாக குறிப்பிட்டு ஒரு கடிதமும் வழங்கி அதன் விவரங்களை எடுத்துரைத்தார்.

அதன் பிறகு, மாநகராட்சி ஆணையரிடம் முதலில், தனது MPLADS நிதியின் கீழ் மேற்கொள்ளப்படும் பணிகள் எங்கு நிறைவு பெற்றுள்ளன என்பது தொடர்பான விவரங்களை, நாடாளுமன்ற உறுப்பினராகிய தனக்கு நேரில் பார்வையிட்டு, பணிகளின் தரம் மற்றும் முழுமையை ஆய்வு செய்து உறுதி செய்யும் வாய்ப்பு வழங்கப்பட வேண்டும்.

எனவே, தனது MPLADS நிதியின் கீழ் செயல்படுத்தப்படும் எந்தவொரு பணியும் நிறைவடைந்தவுடன், அப்பணியின் நிறைவு நிலை குறித்த விவரங்களை நாடாளுமன்ற உறுப்பினர் அலுவலகத்திற்கு உடனடியாக தெரிவித்து, அலுவலகத்திலிருந்து நேரில் ஆய்வு மேற்கொள்ள தேவையான ஒருங்கிணைப்பை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொண்டார்.

அடுத்ததாக, திருச்சி மாநகராட்சி வார்டு எண் 59, மன்னார்புரம் சர்வீஸ் சாலையில் திருச்சி - மதுரை தேசிய நெடுஞ்சாலை பயணியர் நிழற்குடை அமைக்கும் பணியை விரைந்து நிறைவேற்றக் கோரி கடிதம் கொடுத்தார்.

அடுத்ததாக, கரூர் தேசிய நெடுஞ்சாலையில் புதை வடிகால் இணைப்பு அமைத்தல், திருவெறும்பூர் பேருந்து நிலையம் மற்றும் ரயில் நிலையத்தை இணைக்கும் அணுகுசாலையை விரிவாக்கிதல், திருச்சிக்கு ஸ்வச் பாரத் சர்வேஷன் திட்டத்தில் மீண்டும் முதலிடம் பெற நடவடிக்கை எடுத்தல், திருவெறும்பூர் பேருந்து நிலையக் கட்டுமானப் பணிகளை விரைவுபடுத்துதல், மாரிஸ் சாலை மேம்பாலப் பணிகளுக்கான அட்டவனை வழங்கி ஒருங்கிணைப்பு மேற்கொள்ளுதல், மன்னார்புரம் முதல் பஞ்சப்பூர் வரையிலான தேசிய நெடுஞ் சாலையில் தெருவிளக்குகள் அமைக்க மிக கட்டணத்தை ஏற்கவும் PIU அனுமதி அளிக்க, எழில் நகர் சாலையிலிருந்து திருவெறும்பூர் ரயில் நிலையத்திற்கு புதிய நுழைவுப் பாதை அமைக்க அங்கன்வாடி மையத்தை மாற்றியமைத்தல், திருஎறும்பீஸ்வரர் கோவிலில் மின் விளக்கு மற்றும் கழிப்பிடம் வசதிகளை ஏற்படுத்துதல், திருச்சி-புதுக்கோட்டை தேசிய நெடுஞ்சாலையில் விமான நிலைய ஓடுதளப் பகுதியில் வளாக சுவரை ஒட்டி கூடுதல் குறைந்த உயர மின் விளக்குகள் அமைத்தல் உள்ளிட்ட பல்வேறு நிலுவையில் உள்ள கோரிக்கைகள் தொடர்பாக நினைவூட்டல் கடிதம் வழங்கினார்.

மக்களுக்கான கோரிக்கைகளை நிறைவேற்றுவதிலும், அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதிலும், எதிர்கால நல்வாழ்வுக்கான திட்டங்களை வகுப்பதிலும், அப்பகுதியின் மக்கள் பிரதிநிதியும், அதிகாரிகளும் இணைந்து செயல்படும்போது அந்தப் பகுதி நிச்சயம் உயர்ந்து வளரும் என்பது துரை வைகோ எம்.பி., அவர்களின் உறுதியான நம்பிக்கை.

அத்தகைய உயரிய பொறுப்பை ஏற்றுள்ள இவ்விரு அதிகாரிகளுடன் இணைந்து செயல்பட தான் முழு மனதுடன் தயாராக இருப்பதாகவும், இச்சந்திப்பிற்கு பிறகு அதே எண்ணத்துடன் அவர்களும் தன்னுடன் இணைந்து செயல்படுவார்கள் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளதாகவும் துரை வைகோ எம்.பி., கூறினார். ●

## சென்னை மண்டல மாவட்டக் கழக செயலாளர்கள் கூட்டம்

சென்னை மண்டல மாவட்டக் கழக செயலாளர்கள் கூட்டம் 13.07.2026 திங்கள்கிழமை மாலை 4 மணிக்கு தலைமைக் கழகம் தாயகத்தில் கழக துணைப் பொதுச்செயலாளர் **சு.ஜீவன்** அவர்கள் தலைமையிலும், தலைமைக் கழக செயலாளர் **ஆ.வந்தியத்தேவன்**, அமைப்புச் செயலாளர் **சு.குருநாதன்** ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற உள்ளது.

சங்கொலி 30 ஆம் ஆண்டு நிறைவு விழா கூட்ட ஏற்பாடுகள் குறித்து முடிவெடுக்க உள்ள இக்கூட்டத்தில் சென்னை மண்டல மாவட்டக் கழகச் செயலாளர்கள் கலந்து கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**'தாயகம்'**
சென்னை - 8
09.07.2026

**தலைமைக் கழகம்**
மறுமலர்ச்சி தி.மு.க.,


## சங்கொலி சிறப்பிதழ் விளம்பர கட்டணங்கள்

கடைசி பக்கம் வண்ணத்தில்
**ரூபாய் 15,000/-**

உள் பக்கம் வண்ணத்தில் **ரூபாய் 12,000/-**

கருப்பு வெள்ளை வண்ணத்தில்
**ரூபாய் 5000/-**

முழுப்பக்கம் வண்ணத்தில் **ரூபாய் 10,000/-**

நிர்வாகி
**சங்கொலி**

# தேசிய நெடுஞ்சாலைத் துறை அதிகாரி கோவிந்தசாமி துரை வைகோ எம்.பி., சந்திப்பு



திருச்சி நாடாளுமன்ற தொகுதியில், தேசிய நெடுஞ் சாலைத்துறை மேற்கொள்ள வேண்டிய, நிலுவையில் உள்ள திட்டங்கள் பற்றி ஒரு கலந்துரையாடல் அவசியம் என்ற அடிப்படையில், தேசிய நெடுஞ் சாலைத்துறை (NHAI) மதுரை மண்டல அதிகாரி திரு. கோவிந்தசாமி அவர்களை தனதுதிருச்சி நாடாளுமன்ற தொகுதி அலுவலகத்திற்கு துரை வைகோ எம்.பி., அழைத்திருந்தார். அதன் பேரில், நேரில் வந்திருந்த அவருடன் பல்வேறு நிலுவையிலுள்ள திட்டங்கள் குறித்து அவர் விவாதித்தார்.

அதில், ஏற்கனவே தான் ஒன்றிய தேசிய நெடுஞ் சாலைத்துறை அமைச்சரை சந்தித்து கொடுத்துள்ள கோரிக்கைகள் குறித்து விளக்கினார்.

முக்கியமாக (1) அவரது முயற்சியால் செயலாக்கம் பெறப்பட்டு வரும் G - Corner பகுதியில் உயர்மட்ட சுழற்பாலம் (Elevated Rotary) திட்டம், சஞ்சீவி நகர், ஸ்ரீரங்கம் Y-Junction, மாருதி நகர் ஆகிய இடங்களில் வாகன சுரங்கப்பாதைகள் (Vehicular Underpasses) மற்றும் தனது தொகுதி நிதியில் கட்டப்படும் மன்னார்புரம் பேருந்து நிறுத்தத்தில் பேருந்து போக்குவரத்துக்கு வசதியாக Bus Bay அமைப்புப் பணிகளை விரைவாக நிறைவேற்றிட வேண்டும் என கோரிக்கை வைத்தார். அதற்கு சில துறைகளிலிருந்து வரவேண்டிய பயன்பாட்டு மாற்றம் (utility shifting) செய்து தருவதில் உள்ள தாமதம் குறித்து அதிகாரி முன்வைத்த கோரிக்கையை, அமைச்சர் மற்றும் அதிகாரிகளிடம் பேசி அதை விரைவாக பெற்றுதர உறுதியளித்தார்.

(2) அடிக்கடி நடைபெறும் விபத்துகள் மூலம் உயிரிழப்பு ஏற்பட்டும் குறுகலான திருச்சி - கரூர் தேசிய நெடுஞ்சாலையை அகலப்படுத்துவதற்காக ஏற்கனவே கையகப்படுத்தப் பட்ட நிலங்களை முன்னுரிமை அடிப்படையில் பயன் படுத்தி நடவடிக்கை எடுக்கக் கோரிக்கை வைத்தார். அதற்கு, தேவைப்படும் ஆய்வுகளை மேற்கொண்டு சாலை விரிவாக்கத்திற்கான பரிசீலனையை மேற் கொள்வதாகவும் உறுதி அளித்தார்.

(3) பால்பண்ணை முதல் துவாக்குடி வரை (தேசிய நெடுஞ்சாலை-83) சாலையில் பெரும்பாலான விளக்குகள் சரியாக எரியவில்லை என்ற துரை வைகோ எம்.பி., அவர்களின் கோரிக்கையை ஏற்று கூடுதலாக 75 விளக்குகள் அமைக்கப்பட்டது, அவை சரியானபடி எரிந்தபோதிலும் ஏற்கனவே உள்ள விளக்குகளில் பெரும்பாலானவை சரியாக எரியவில்லை என்பது குறித்து எடுத்துரைத்தார். இது சமந்தமாக 3.6 கோடி ரூபாய் மதிப்பில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளதாகவும், விரைவில் அப்பணிகள் முடிவுற்று விளக்குகள் அமைக்கப்படும் என்றும் கூறினார்.

(4) பஞ்சபூரில் முன்மொழியப்பட்டுள்ள உயர்மட்ட பாலத்தின் நிலை குறித்து கேட்டதற்கு இத்திட்டம் முதன்மையாக எடுத்துக் கொண்டு உள்ளதாகவும் கூறியதோடு மார்ச் மாதம் அதற்கான பணிகள் முழுவீச்சில் தொடங்கப்படும் என்று பதிலளித்தார்.

(5)திருச்சி - காரைக்குடி நான்கு வழிச்சாலைத் திட்டப் பணிகளையும் கருவேப் பிலான் கேட் (LC No: 372) மேம்பாலத்தின் இருபுறச் சாலைகளி அமைக்கும் திட்டப் பணிகளையும் விரைவுபடுத்தக் கேட்டிருந்தார். அது தொடர்பாகவும் உரிய நடவடிக்கை மேற்கொள்வதாக உறுதியளித்தார்.

# ஓமன் நாட்டில் உயிரிழந்த நிஷாந்த் குடும்பத்தினருக்கு துரை வைகோ எம்.பி., ஆறுதல்



12.06.2026 அன்று, ஓமன் நாட்டின், துக்ம் (Duqm) துறைமுகத்தில் Glory International நிறுவனக் கப்பலில் பணியில் இருந்தபோது, தூத்துக்குடி மாவட்டத்தைச்சேர்ந்த நிஷாந்த் உடல் நலக்குறைவால் உயிரிழந்தார் என்ற துயரச்செய்தி அவரது குடும்பத்தினருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த தகவல் கிடைத்ததும், நிஷாந்த் அவர்களின் உடலை தங்களிடம் ஒப்படைக்க ஏற்பாடு செய்துதர வேண்டும் என்ற கோரிக்கையுடன் மறுமலர்ச்சி திமுக நிர்வாகிகள் மூலம் நிஷாந்த் அவர்களின் மனைவி திருமதி சரோபின் அவர்கள் துரை வைகோ எம்.பி., அவர்களை அணுகினார்.

தகவல் அறிந்த உடன், 15.06.2026 அன்று மாண்புமிகு இந்திய ஒன்றிய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் அவர்களுக்கு கடிதம் எழுதி, மஸ்கட்டில் உள்ள இந்திய தூதரக அதிகாரிகளிடம் தொடர்புகொண்டு, ஓமன் நாட்டில் கப்பல் பணியில் உயிரிழந்த திரு. நிஷாந்த் உயிர்த்தநாதன் அவர்களுடையை உடலை கண்ணியத்துடன் தாயகம் கொண்டுவர அனைத்து சட்ட நடவடிக்கைகளையும் மேற்கொண்டு உதவுமாறு கேட்டுக்கொண்டார்.

துரை வைகோ எம்.பி., அவர்களின் கோரிக்கையை ஏற்று அதற்கான பணிகளை விரைந்து மேற்கொண்டு வருவதாகவும் விரைவில் நிஷாந்த் அவருடைய உடல் இந்தியாவிற்கு கொண்டுவரப்படும் என்றும் பதில் பெற்றார்.

அதன் பிறகு, மீண்டும் 21.06.2026 அன்று வெளியுறவுத்துறை அதிகாரிகளை மின்னஞ்சல் மூலம் தொடர்பு கொண்டு, தாமதத்திற்கான காரணங்களை சரி செய்ய சொல்லி விரைந்து நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொண்டார்.

அதன்படி அவரது உடல் ஓமனிலிருந்து இந்தியாவிற்கு அனுப்பி வைக்கப்பட்டு உள்ளதாகவும், திருவனந்தபுரம் வந்தடைந்து அங்கிருந்து அவர்களது இல்லம் சென்றடையும் என்றும் தகவல் கிடைத்தது.

இந்த நேரத்தில், நிஷாந்த் அவர்களின் மனைவி திருமதி சரோபின் மற்றும் அவர்களது குடும்பத்தினர் அனைவருக்கும், இந்த கடினமான காலத்தை திடமனதுடன் கடந்து வரும் வலிமையை ஆண்டவன் தர வேண்டும் என்று வேண்டிக்கொண்டு, அவர்களுக்கு தனது ஆறுதலை, இரங்கலை தெரிவித்தார்.

துரை வைகோ எம்.பி., அவர்களின் கோரிக்கையை ஏற்று விரைந்து நடவடிக்கை மேற்கொண்ட வெளியுறவுத்துறை அமைச்சர் மற்றும் அதிகாரிகளுக்கு தனது நன்றியை தெரிவித்துள்ளார்.

இந்த துயரச் செய்தியை தன்னிடம் எடுத்து வந்து, உயிரிழந்த நிஷாந்த் அவர்களின் குடும்பத்தினருக்கு உறுதுணையாக நின்ற கழக தூத்துக்குடி மாவட்ட நிர்வாகிகளுக்கும், பிற இயக்க தோழர்களுக்கும் தனது நன்றியை துரை வைகோ எம்.பி., உரித்தாக்குவதாக தெரிவித்துள்ளார்.

# திருச்சி - கீரனூர் இரயில் நிலையத்தில் துரை வைகோ எம்.பி., நேரில் ஆய்வு





திருச்சி நாடாளுமன்ற தொகுதிக்கு உட்பட்ட கீரனூர் ரயில் நிலையத்தில் 29.06.2026 அன்று துரை வைகோ எம்.பி., ஆய்வு மேற்கொண்டார்.

ஆய்வின்போது, ரயில் நிலைய நுழைவாயில் பகுதியில் மழைநீர் தேங்கி நிற்பது கண்டறியப் பட்டது. இதனை உடனடியாக மண் நிரப்பி சீரமைக்குமாறும், எதிர்காலத்தில் மழைநீர் தேங்காத வகையில் தரை மட்டத்தை உயர்த்தி, சரியான சாய்வுடன் நிரந்தர தீர்வு ஏற்படுத்துமாறும் ரயில்வே அதிகாரி களுக்கு அறிவுறுத்தினார்.

தொடர்ந்து, பயணிகள் பயன்படுத்தும் கழிப்பறைகளை ஆய்வு செய்தார். கழிப் பறைகள் மிகவும் மோசமான நிலையில் இருந்ததுடன், முறையான பராமரிப்பும் இல்லாதது கண்டறியப்பட்டது. அவற்றை உடனடியாக சுத்தம் செய்து, தொடர்ந்து பராமரிப்பதை உறுதி செய்யுமாறும், குவளை மற்றும் வாளிகளை உடனடியாக வழங்குமாறும் ரயில்வே அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

பயணிகள் காத்திருப்பு அறையில் பழமையான மற்றும் சுத்தமற்ற இருக்கைகள் இருப்பதை கண்டறிந்தார். அவற்றை அகற்றி புதிய இருக்கைகள் அமைக்குமாறு அதிகாரிகளிடம் வலியுறுத்தினார். இதனை விரைவில் மேற்கொள்வதாக அவர்கள் உறுதியளித்தனர்.

மேலும், நடைமேடை முழுவதும் பயணிகள் வசதிக்காக மேற்கூரை அமைக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத் தினார். அதேபோல, ரயில் நிலைய நடை மேடையில் மழைநீர் தேங்காத வண்ணம் சரி செய்ய வேண்டும் என கேட்டு கொண்டார்.


இதுகுறித்து அதிகாரிகள் பதிலளிக் கையில், வரவிருக்கும் ரயில் நிலைய மறுசீரமைப்புத் திட்டத்தில் இதனை இணைத்து செயல்படுத்துவதாக தெரி வித்தனர்.

ஆய்வின்போது, ரயில் நிலையம் மற்றும் வாகன நிறுத்துமிடத்தில் கண்காணிப்பு கேமராக்கள் (CCTV) அமைக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை வைத்தனர். சிசிடிவி அமைக்கும் பணிகளை உடனடியாக மேற்கொள்ளுமாறு அதிகாரி களிடம் துரை வைகோ எம்.பி., வலியுறுத்தினார். அவர்களும் மேற்கொள்வதாக உறுதியளித்தனர்.

மேலும், ரயில் நிலையத்தின் முன்புறத்தில் மின்விளக்கு அமைக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை வைத்தனர். இதனை விரைவாக நிறைவேற்ற தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ரயில்வே அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

ஆய்வின் நிறைவில், ரயில் நிலையத்தை பயன்படுத்தி வந்த பொதுமக்களை நேரில் சந்தித்து, அவர்களின் கருத்துகள் மற்றும் கோரிக்கைகளை கேட்டறிந்தார். பொதுமக்களின் தேவைகளை விரைந்து நிறைவேற்றுவதற்காக தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்படும் என்று துரை வைகோ எம்.பி., கூறினார்.

# ஒலித்தது 'சங்கொலி' முழக்கம்! 3










'சங்கொலி' இதழில் வெளி வந்த தலைவர் வைகோ அவர்களின் உரைகள், கட்டுரைகள், கடிதங்கள் முதலானவைகள், நூற்றுக்கணக்கான சிறு சிறு நூல்களாக கழகத் தோழர்களால் வெளியிடப்பட்டன. தங்கள் இல்ல மணவிழாக்களில், தாம் பூலத்திற்கு மாற்றாக அவைகளை உறவினர்களிடம் வழங்கும் 'அமைதிப் புரட்சியை' கழகத் தோழர்கள் ஆரவாரமின்றி நிகழ்த்தி சாதனை படைத்தார்கள்.

திரும்பிப் பார்க்கிறேன், தமிழ்த் தொண்டு, ஈழத்தமிழரைக் காப்போம், தணலும் தன்மையும், தமிழரின் போர்வாள், வைகோவின் வெல்லும் சொல், வியத்தகு வித்தகர் வைகோ, தாகம் தீர... பாசனம் பெருக..., அண்ணாவின் அகல விளக்கு, வீரத்தின் புன்னகை, பரவட்டும் தமிழிசை, வளரட்டும் வள்ளுவம், கனவு நனவாகிறது, நாதியற்றவனா தமிழன், புயலின் முகங்கள், ஈரோட்டுப் பரணி, வெற்றிப்படிகள், சிகரத்தை நோக்கி, முத்தமிழ் முக்கனிகள், வெல்லும் தமிழ், புதிய விடியல், பிறந்த மண்ணில் வைகோ பிரகடனம், பொங்கு தமிழ் எழுச்சி என எண்ணற்ற சிறுநூல்கள், தலைவரின் தனிச்செயலாளராக பணியாற்றிய அருணகிரி முயற்சியால் தொடர்ச்சியாக வெளி வந்தன!

சங்கொலியின் பொறுப்பாசிரியராக பணியாற்றிய க.திருநாவுக்கரசு சங்கொலி இதழில் 18 வாரங்களாக எழுதிய திருக்குறள் தொடர்பான ஆய்வுக் கட்டுரைகள் 'திருக்குறளும் திராவிடர் இயக்கமும்' என்ற தலைப்பில் (விலை ரூ 50/- பக்கங்கள் 160) நூலாக வெளிவந்தது. தலைவர் வைகோ அவர்களின் அணிந்துரை, 'சிந்தனையாளன்' இதழ் ஆசிரியர் அறிஞர் வே.ஆனைமுத்து அவர்களின் சிறப்புரை ஆகியன இந்நூலுக்கு மகுடம் சூட்டியது! 1997 பிப்ரவரியில் இந்நூல் வெளிவந்தது!

கழகத்தின் துணை பொதுச்செயலாளராக பணியாற்றிய பொன்.முத்துராமலிங்கம் அவர்கள், சங்கொலி முதல் இதழில் 'ஏன் வேண்டும் மறுமலர்ச்சி' என்ற தலைப்பில் ஒரு கட்டுரை எழுதினார். இதனையும், 'சங்கொலி' இதழில் அவர் எழுதிய 22 கட்டுரைகளையும் இணைத்து, 'சங்கொலி சலங்கைகள்' என்ற தலைப்பில் (விலை ரூ 30/- பக்கங்கள் 144) 1997 ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் நூலாக வெளியிட்டார்!

1998, செப்டம்பர் 15, அன்று அண்ணா பிறந்தநாள் விழாவை, தலைநகர் சென்னையில், மறுமலர்ச்சிப் பேரணியோடு, மாநாடு நிகர் பொதுக்கூட்டமாக நமது கழகம் நடத்தியது.

அலைகடல் ஓரத்தில் தமிழர் தம் கொற்றக் கோட்டை என நாம் அமைத்த மேடை, கோட்டையின் உச்சியில், அறிவாசான் பெரியாரும், அறிஞர் அண்ணாவும் உரையாடும் காட்சி, வீர இளைஞர் இருவர் தமிழர் நலம் காக்க சங்கொலி முழங்கிடும் தோற்றம், கொத்தளங்களில் விண்முட்ட பறந்திட்ட நம் கொடிகள், பிரதமர் அடல்பிகாரி வாஜ்பாய், பஞ்சாப் முதல்வர் பிரகாஷ்சிங் பாதல், காஷ்மீர் முதல்வர் டாக்டர் பாருக் அப்துல்லா, உள்துறை அமைச்சர் எல்.கே.அத்வானி உள்ளிட்ட நம் சிறப்பு விருந்தினர்கள், 'தங்களை கவர்ந்த பேரணி' என வாழ்த்தி மகிழ்ந்த, நம் பட்டாள அணிவகுப்பான மறுமலர்ச்சி பேரணி, அண்ணா விழாவில் எழுச்சி முழக்கமிட்ட தலைவர் வைகோவின் இடிமுழக்க பேச்சு இவைகளின் திரட்சியான அண்ணா விழாவை நம்மால் எளிதில் மறக்க இயலாது!

சரித்திரச் சிறப்புமிக்க அண்ணா விழாவை முடித்துக் கொண்டு, அமெரிக்க அரசின் அழைப்பினை ஏற்று, அறிவாசான் அய்யா பெரியார் பிறந்தநாளில், கிளீவ் லேண்ட் சென்றடைந்தார் தலைவர் வைகோ! அங்கிருந்து ஸ்விஸ் நாட்டின் தலைநகர் ஜெனிவா சென்று ஐ.நா. மன்றத்தின் சர்வதேச மனித உரிமைகள் ஆணையத்தின் துணைத் தலைவர் ஹெர்ஸ்ட் அவர்களை சந்தித்து, ஈழக் கொடுமைகளை எடுத்துரைத்து நீதிகேட்டு முறையிட்டார்.

தொடர்ந்து அமெரிக்க மண்ணில் பயணித்து, கலந்து கொண்ட நிகழ்ச்சிகளின் மாட்சியை கண்மணிகளுக்கு சங்கொலி இதழில் 15 வாரங்கள் கடிதங்களாக எழுதினார் தலைவர் வைகோ! அவைகள் 190 பக்கங்கள் கொண்ட 'இதயச் சிறகுகள்' என்ற நூலாக, 17.07.1999 அன்று சென்னை வள்ளுவர் கோட்டத்தில் வெளியிடப் பட்டது. நிதி அமைச்சர் யஷ்வந்த் சின்கா, திராவிட இயக்க மூத்த தலைவர் இரா.செழியன், நரம்பியல் நிபுணர் டாக்டர் பி.ராமமூர்த்தி, எழுத்தாளர்கள் ராஜ்நாராயணன், வல்லிக்கண்ணன், சாமிதோப்பு பாலபிரஜாபதி அடிகளார் முதலான அறிஞர் பெருமக்கள் வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார்கள்.

பொதுச்செயலாளர் வைகோ அவர்களின் எழுச்சி மிகு உரைகளைப் போலவே, அவரின் 17 கடிதங்களையும் சங்கொலி இதழில் வெளியானதை கடலூர் மாவட்ட மறுமலர்ச்சி தி.மு.க 2003 சூலைத் திங்களில் வைகோவின் கடிதங்கள்-1 என்ற 104 பக்கங்கள் கொண்ட நூலாக 20 ரூபாய் விலையில் வெளியிட்டது.

பிரெஞ்ச் நாட்டின் புகழ்பெற்ற தளபதி ஆல்ஃபிரட் ஃடிரேபஸ் மீது பழி சுமத்தப்பட்டு குற்றம் அற்றவனாக அவன் மீண்ட வரலாறு, ஈழத்துயரம் குறித்து பிரதமருக்கு எழுதிய கடிதங்கள், கழகக் கண்மணிகளுக்கு இயக்கம் குறித்து எழுதிய கடிதங்கள் என சங்கொலி இதழில் வெளிவந்த தலைவர் வைகோவின் 14 கடிதங்கள், வைகோ கடிதங்கள்-2 என்ற பெயரில், ஆந்திர மாநில நெல்லூர் கழகத் தோழர்கள் 2007 ஆம் ஆண்டு சூன் திங்களில் வெளியிட்டார்கள். விழுப்புரம் நகரில் 30.06.2007 அன்று நடைபெற்ற கழக மண்டல மாநாட்டில் இந்நூல் வெளியிடப்பட்டது.

'சங்கொலி' வெளியீடுகளிலேயே சிகரமானது தலைவர் வைகோ அவர்களின் 'சிறையில் விரிந்த மடல்கள்' என்ற தமிழ் நூலும், From the Portals of a Prison என்ற ஆங்கில நூலும் ஆகும்.

பொடா சட்டத்தின் கீழ் வேலூர் மத்திய சிறையில் 222 ஆம் எண் கொட்டடியில் தண்டனை பெற்ற 19 மாத காலத்தில், சங்கொலி இதழில், தன் கண்மணிகளுக்கு தலைவர் வைகோ எழுதிய 61 கடிதங்கள்தான், காலக் கருவூலமாக, வரலாற்றுப் பெட்டகமாக, இந்நூல்களாய் வடிவம் பெற்றன.

பெரியார், அண்ணா எனும் நம் உயிர் நிகர் தலைவர்களின் வரலாற்று நிகழ்வுகள், நெஞ்சில் நிறைந்த நேதாஜி, அரசியலுக் கோர் ஆபிரகாம் லிங்கன், களங்களின் மாவீரன் கரிபால்டி, புரட்சி வீரன் சேகுவேரா, தூக்குக் கயிற்றை முத்தமிட்ட பாலைவனச் சிங்கம் உமர் முக்தார் ஆகிய தலைவர்களின் வீர வரலாற்றையும், தன் சிறை அனுபவங்களையும், விளக்கி நமக்கு தீட்டியுள்ள தலைவர் வைகோவின் கடித இலக்கியம், பண்டித ஜவஹர்லால் நேருவின் உலக சரித்திரக் கடிதங்கள் போல, கருத்துச் செறிவுடன் நம் அறிவுக்கு விருந்தாக அமைந்துள்ளது.

நிகழ்கால அரசியல் அதிசயம் என்ற தலைப்பிலான ஆனந்த விகடன் இதழின் (15.02.2004) தலையங்கம், தீரன் நீ! வீரன் நீ! வைகோ வருக! வாழ்க! என்ற முத்தமிழ் அறிஞரின் பாசமிகு கவிதை, சேதுக்கால்வாய் திட்டத்தை நடைமுறைப்படுத்து மாறும், மத்திய தேர்வாணைக் குழுவின் இந்தி ஆதிக்கத்தைக் கைவிடுமாறும் ஈராக் போருக்கு முற்றுப்புள்ளி வைத்து உலக அமைதியை நிலை நாட்டவும் பிரதமர் வாஜ்பாய்க்கு சிறையில் இருந்து எழுதிய கடிதங்கள், 11 ஆவது கழக பொதுக் குழுவிற்கு சிறையில் இருந்து எழுதி அனுப்பிய தலைவர் வைகோவின் உரை வீச்சு முதலான பிற்சேர்க்கைகளும், நூலுக்கு நிகராக அடர்த்தியாக அமைந்து அறிவு மணம் வீசுவதை இந்நூலை படிக்கும் நம்மால் உணர முடிகிறது!

சங்கொலியில் வெளியான தலைவர் வைகோவின் உரைகளை ஆனந்த விகடன் நிறுவனமும் பெருமையோடு 'வெல்லும் சொல்' எனும் நூலாக வெளியிட்டது. பொன்னமராவதியில் முத்தமிழ் பாசறையின் ஆண்டு விழாவில் சிலப்பதிகாரம் குறித்து நிகழ்த்திய உரை, தஞ்சையிலும், டெல்லியிலும், பொன்னியின் செல்வனைப் பற்றி ஆற்றிய உரை, சென்னை உலகத் தமிழ் எழுத்தாளர் சங்க விழாவில் கல்கியின் சிவகாமியின் சபதம் குறித்து பேசிய பேச்சு, சேலம் குகை இலக்கிய நண்பர்கள் குழு விழாவில் அகமும் புறமும் எனும் தலைப்பில் ஆற்றிய உரை, ஈரோடு புத்தக திருவிழாவில், எழுத்து எனும் கருவறை என்ற தலைப்பில் நிகழ்த்திய உரை, சென்னை புத்தக காட்சியில் சொல்லாற்றல் என்ற தலைப்பில் ஆற்றிய உரை, பொள்ளாச்சி கல்லூரியில் இலக்கியங்களில் மனித உரிமைகள் என்ற தலைப்பில் ஆற்றிய உரை, சேலம் மார்கழிப் பேரவையில், மகளிர் உரிமைகள் ஆற்றிய உரை, தஞ்சை வழக்கறிஞர் மன்றத்தில் வரலாறு சந்தித்த வழக்குகள் என்ற தலைப்பில் நிகழ்த்திய உரை, சென்னை இராஜா அண்ணாமலை மன்றத்தில், எங்கே போகிறோம் என்ற தலைப்பில் நிகழ்த்திய உரை, தென்காசி இஸ்லாமிய இலக்கியக் கழகத்தில் இஸ்லாமிய இலக்கியம் என்ற தலைப்பிலான உரை, தென்காசி திருவள்ளுவர் கழக மணிவிழாவில், வளரட்டும் வள்ளுவம் என்ற தலைப்பிலான உரை முதலான தலைவர் வைகோவின் 13 உரைகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

"வில்லில் இருந்து புறப்பட்டு வரும் அம்பு தன் இலக்கை அடைய எடுத்துக் கொள்ளும் வேகத்தையே மிஞ்சும்



ஆ.வந்தியத்தேவன் தலைமைக் கழகச் செயலாளர்

வைகோவின் சொல் அம்பு! இது அனைவருக்கும் தெரிந்த ஒன்றுதானே! அரசியல்வாதி, இலக்கியவாதி, சொற்பொழிவாளர், எழுத்தாளர், பத்திரிகையாளர் என பன்முக ஆளுமைகள் வைகோவிற்கு இருந் தாலும், அவர் தமிழின உணர்வாளர் என்பதே அவரது தனித்துவ அடையாளம்!" என்ற விகடனின் புகழாரம் அந்நூலில் இடம்பெற்றிருப்பது கண்டு நாம் பெருமிதமும், பெரு மகிழ்ச்சியும் அடைகிறோம்.

என் அண்ணா, புரட்சிக்கதிர்கள் என்ற நூல்களையும் ஆனந்த விகடன் நிறுவனம் வெளியிட்டு, தலைவர் வைகோ அவர்களின் அறிவாற்றலை அகிலத்திற்கு உணர்த்தியது!

"வயதின்றி தவிக்கின்றேன்
வைகோவுக்கு
வாய்ப்பாகத் தொண்டாற்ற
வலிவும் இல்லை!" எனத் தொடங்கி
வாக்கியங்கள் முடிந்துவிடும்
வைகோ என்னும்
வரலாறு முடிவதில்லை"

என்று முடியும் கவிதைதான், சங்கொலி இதழில் தத்துவக் கவிஞர் குடியரசு தீட்டிய இறுதி கவிதை!

இந்தக் கவிதையில் தொடங்கி, அவரின் 126 கவிதைகளை தொகுத்து சிங்கப்பூர் மறுமலர்ச்சி திமுக தோழர்கள் 'குடியரசு கவிதைகள்' என்ற நூலினை, அவரின் நினைவு நாளில் (12.02.2008) வெளியிட்டார்கள்!

தத்துவக் கவிஞரின் உடல் அடக்கத்தின்போது, "அவரது பிள்ளைகள் வசிக்க கழகம் வீடும் கட்டிக் கொடுக்கும், அவரது கவிதைகளை நூலாகவும் ஆக்கு வோம்!" என்று தலைவர் வைகோ அறிவித்தார். இரண்டையும் கழகம் நிறைவேற்றியது!

கழக பொருளாளர் மு.செந்திலதிபன் அவர்கள், சமூக நீதி, தமிழ் ஈழம், இட ஒதுக்கீடு, இந்தி எதிர்ப்பு முதலானவைகளை விளக்கி சங்கொலி இதழில் எழுதிய 26 கட்டுரைகளை, உரிமை போராட்டங்கள் என்ற தலைப்பில் நூலாக்கி, கடலூர் மாவட்ட மறுமலர்ச்சி தொழிலாளர் முன்னணி வெளியிட்டது!

நாடாளுமன்றத்தில் நமது குரல், இரத்தம் கசியும் இதயத்தின் குரல், வைகோவின் சங்கநாதம், யமுனைக் கரையில் ஆகிய நூல்கள் தலைவர் வைகோவின் நாடாளுமன்ற பணிகளை விளக்கும் நூல்களாக அமைந்த நிலையில், இவைகளில் இடம்பெறாத தலைவர் வைகோவின் உரைகளை சங்கொலி இதழில் 29 வாரங்கள் மு.செந்திலதிபன் அவர்கள் தொகுத்து எழுதினார். அவைகள் நாடாளு மன்றத்தில் வைகோ என்ற தலைப்பில், பிரபாகரன் பதிப்பகத்தால் வெளியிடப்பட்டு நல்ல பயன் தந்தது!

படேல் சிலை; இந்து ராஷ்டிரக் கனவுச் சின்னம் என்னும் கட்டுரைத் தொடரை சங்கொலி இதழில் 4 ஆண்டுகளாக, 150 வாரங்களுக்கும் மேலாக செந்திலதிபன் எழுதிய ஆய்வுக் கட்டுரை அறிஞர் பெருமக்களால் பாராட்டப்பட்டது. கழகத்திற்கு புகழ் சேர்த்தது. இந்தக் கட்டுரைகளை பொள்ளாச்சி எதிர் வெளியீடு, இந்துத்துவ பாசிசம் வேர்களும், விழுதுகளும் என்ற தலைப்பில் ஆயிரம் பக்கங்கள் கொண்ட ஆவணமாக வெளியிட்டது. கழகப் பொதுச் செயலாளர் வைகோ, தமிழர் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி ஆகியோரின் அணிந்துரைகள் வரலாற்றுப் பெட்டகமான இந்நூலுக்கு மகுடம் சூட்டி பாராட்டுகின்றன!

கவிஞர் தமிழ்மறவன், ஆ.வந்தியத்தேவன், கவிஞர் மா.மணிவேந்தன் ஆகியோரின் சங்கொலி படைப்புக் களை, அரசியலில் அதிசயம் வைகோ, பெரியாரின் போர்வாள் அண்ணா, நம்மால் விடியும் என்ற தலைப்புக்களில் தலைமைக் கழகமே நூலாக்கி வெளியிட்டது; வெளியீட்டு விழாவினையும் நடத்தியது. தலைவர் வைகோ நூலாசிரியர்களை பாராட்டி, வாழ்த்தி சிறப்பு செய்தார். ●

# கீரனூர், கருவேப்பிலான் பகுதிகளில் துரை வைகோ எம்.பி., நேரில் ஆய்வு





திருச்சி நாடாளுமன்றத் தொகுதிக்கு உட்பட்ட புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வகோட்டை சட்டமன்றத் தொகுதியில் உள்ள கீரனூர் பகுதி மற்றும் புதுக்கோட்டை சட்டமன்ற தொகுதியில் உள்ள கருவேப்பிலான் ஆகிய பகுதி களில் 29.06.2026 அன்று துரை வைகோ எம்.பி., ஆய்வு மேற்கொண்டார்.

முதலில், கீரனூர் அரசினர் பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்குச் சென்று, பள்ளியின் தேவைகள் குறித்து தலைமை ஆசிரியர் மற்றும் ஆசிரியர்களுடன் கலந்துரையாடினார். அப்போது, 11 மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவிகளுக்கு கணிதப் பாடம் கற்பிக்க ஆசிரியர் பற்றாக்குறை இருப்பதாக தெரிவித்தனர். இதுகுறித்து மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு சென்று, தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதியளித்தார்.

மேலும், பள்ளிக்கு விளையாட்டு மைதானம் இல்லாததால் மாணவிகள் சிரமம் அடைவதாகவும், பள்ளிக்கு அருகில் பயன்படுத்தப்படாமல் உள்ள ஒரு இடத்தை விளையாட்டு மைதானமாக பயன்படுத்தலாம் என்றும் தெரிவித்தனர். அதனை நேரில் சென்று பார்வையிட்டபோது, அந்த இடம் முழுவதும் புதர்கள் மண்டிக் கிடந்தது தெரியவந்தது. இதுகுறித்து மாவட்ட ஆட்சியரின் கவனத் திற்கு கொண்டு சென்று, அந்த இடத்தை சுத்தம் செய்து மாணவிகளின் பயன் பாட்டிற்கு கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதியளித்தார்.

அதனைத் தொடர்ந்து, முறையாக பராமரிக்கப்படாமல் இருந்த கோயில் குளத்தை ஆய்வு செய்தார். அப்பகுதியில் ஆக்கிரமிப்பு முயற்சிகளும் நடைபெற்று வருவதாக பொதுமக்கள் தெரிவித்தனர். மேலும், கோயில் குளம் அருகே இருந்த அரசமரத்தை, அது தனியார் பட்டா நிலத்தில் இல்லாத நிலையிலும் வெட்ட முயற்சி மேற்கொள்ளப்பட்டதாக ஏற்கனவே பொதுமக்கள் துரை வைகோ கவனத்திற்கு கொண்டு வந்திருந்தனர். இதையடுத்து, கடந்த 11.06.2026 அன்று உடனடியாக மாவட்ட ஆட்சியருக்கு கடிதம் எழுதி நடவடிக்கை கோரியிருந்தார். அதன் பேரில் உடனடி நடவடிக்கை எடுக்கப்பட்டு மரம் வெட்டும் முயற்சி தடுக்கப்பட்டது. இன்று அந்த மரத்தை நேரில் பார்வையிட்டபோது, அதனை பாதுகாக்க நடவடிக்கை எடுத்ததற்காக அப்பகுதி பொதுமக்கள் தங்களது நன்றி தெரிவித்தனர். பின்னர், கீரனூர் அரசினர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளி விளையாட்டு மைதானத்தில் அமைக்கப்பட்டிருந்த உடற்பயிற்சி உபகரணங்களை மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்.

அதனைத் தொடர்ந்து, அருகில் இருந்த ஒன்றிய ஊராட்சி தொடக்கப் பள்ளி கட்டிடம் மிகவும் பழுதடைந்த நிலையில் இருப்பதையும், பள்ளி வளாகத்தில் உள்ள தென்னை மரத்திலிருந்து தேங்காய்கள் பள்ளியின் கூரையில் விழுவதால் மாணவர்களின் பாதுகாப்பிற்கு ஆபத்து ஏற்படுவதாகவும் தெரிவித்தனர். இது குறித்து உடனடியாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு சென்று, மரத்தை அகற்றவும், பள்ளிக் கட்டிடத்தை சீரமைக்கவும் நடவடிக்கை எடுக்க வலியுறுத்துவதாக உறுதியளித்தார்.

அதனைத் தொடர்ந்து, அரசினர் பெண்கள் மேல்நிலைப் பள்ளியிலிருந்து சுமார் 300 மீட்டர் சுற்றளவிற்குள் இரண்டு மதுபானக் கடைகள் செயல்பட்டு வருவதாக பொதுமக்கள் தெரிவித்ததையடுத்து, அந்த இடங்களை நேரில் ஆய்வு செய்தார். மாணவிகளின் நலன் மற்றும் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு, இதுகுறித்து அரசின் கவனத்திற்கு கொண்டு சென்று மதுபான கடைகளை அங்கிருந்து அகற்ற நடவடிக்கை எடுக்க வலியுறுத்துவேன் என்று உறுதியளித்தார்.

இதனைத் தொடர்ந்து, புதுக்கோட்டை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கருவேப் பிலான் பகுதியில் பொதுமக்களை சந்தித்தார். அப்பகுதியில் தனது நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் (MPLADS) மூலம் புதிய நியாயவிலைக் கடை அமைத்துத் தர வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை வைத்தனர். கோரிக்கை வைக்கப்பட்ட இடத்தை நேரில் பார்வையிட்டு, அப்பகுதி மக்களின் நீண்டநாள் தேவையை நிறைவேற்றும் வகையில் நியாயவிலைக் கடை அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என துரை வைகோ எம்.பி., உறுதியளித்தார்.

மக்களின் தேவைகளை நேரில் அறிந்து, உடனடி தீர்வு காண்பதற்கான தனது களப்பணிகள் தொடர்ந்து நடைபெறும் என்று துரை வைகோ எம்.பி., கூறியுள்ளார். ●

## தலைமைக் கழக அறிவிப்பு

## உயர்நிலைக்குழு உறுப்பினர்கள் நியமனம்

மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் உயர்நிலைக் குழு உறுப்பினர்களாக அரியலூர் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் வழக்கறிஞர் **கு.சின்னப்பா** அவர்களும், தென்சென்னை மேற்கு மாவட்டச் செயலாளரும், சென்னை பெருநகர மாநகராட்சி மன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் சைதை **ப.சுப்பிரமணி** அவர்களும், ஆடுதுறை **இரா.முருகன்** அவர்களும் நியமிக்கப்படுகிறார்கள்.

**'தாயகம்'**
சென்னை - 8
06.07.2026

**வைகோ**
பொதுச் செயலாளர்,
மறுமலர்ச்சி தி.மு.க.,

# மறுமலர்ச்சி தி.மு.கழகத்தின் 32 ஆவது பொதுக்குழு தீர்மானங்கள்

மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் 32 ஆவது பொதுக்குழு, கழக அவைத்தலைவர் ஆடிட்டர் ஆ.அர்ஜுனராஜ் அவர்கள் தலைமையில் 27.06.2026 சனிக்கிழமை சென்னை அண்ணா நகர், விஜய்ஸ்ரீ மகாலில் நடைபெற்றது.

கழகப் பொதுச்செயலாளர் வைகோ சிறப்புரை ஆற்றினார்.

பொருளாளர் மு.செந்திலதிபன், முதன்மைச் செயலாளர் துரை வைகோ எம்.பி., துணைப் பொதுச் செயலாளர்கள் செஞ்சி ஏ.கே.மணி, டாக்டர் ரொஹையா, புதூர் மு.பூமிநாதன், சு.ஜீவன், டாக்டர் சி.கிருஷ்ணன் மற்றும் மாவட்டக் கழகச் செயலாளர்கள் உள்ளிட்ட பொதுக்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

இப்பொதுக்குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின் தொடர்ச்சி வருமாறு:

**தீர்மானம்: 19**

சுற்றுச் சூழலுக்கும், விவசாயத்திற்கும், மீனவர்களுக்கும் பெரும் தீங்கினைச் செய்த, கேடு விளைவித்த வேதாந்தா குழுமத்தின் ஸ்டெர்லைட் நாசகார நச்சாலையை எதிர்த்து பல ஆண்டுகள் மக்களைத் திரட்டி மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகமும், வணிகர் சங்கங்களும், தூத்துக்குடி சுற்றுவட்டார கிராம மக்களும் கடுமையான போராட்டங்களை நடத்தினார்கள்.

எடப்பாடி பழனிச்சாமி தலைமையிலான அன்றைய தமிழக அரசு, ஸ்டெர்லைட் நிறுவனத்திற்கு எடுபிடியாக மாறி, போராட்டக்காரர்களை நசுக்கும் நோக்கத்தில் காவல்துறை 13 பேரை சுட்டுக் கொன்றது. ஸ்டெர்லைட் வழக்கு உயர்நீதிமன்றத்திலும் ஆண்டுக் கணக்கில் நடத்தப்பட்டு, இறுதியில் உயர்நீதிமன்ற நீதிபதிகள் சிவஞானம், பவானி சுப்பாராயன் ஆகியோர் அமர்வு ஸ்டெர்லைட் ஆலையை நிரந்தரமாக மூடும் தீர்ப்பை வழங்கியது.

இந்தியாவில் தாமிரம் கிடைப்பது இல்லை என்று அண்மையில் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்து உள்ளார்.

அப்படி தாமிரம் உற்பத்தி செய்யும் தொழிற்சாலையை அமைக்க வேண்டுமானால் அவரது குஜராத் மாநிலத்திலேயே அமைக்கலாமே? பாரதிய ஜனதா ஆட்சி நடத்தும் மாநிலங்களில் அமைக்கலாமே? என்று கழகப் பொதுச் செயலாளர் வைகோ அவர்கள் கேள்வி எழுப்பி உள்ளார்.

தமிழ்நாட்டை நாசமாக்கும் விதத்தில் நம் மாநிலத்தில் வேதாந்தா குழுமம் தாமிர உற்பத்தி ஆலையைத் தொடங்க திட்டமிட்டு, "பசுமைத் தாமிரம்" உற்பத்தி என்ற பெயரில் மீண்டும் ஸ்டெர்லைட் ஆலையைத் திறக்க தமிழக அரசை அணுகி அனுமதி பெற முயற்சிக்கிறது.

தமிழ்நாடு அரசு,வேதாந்தா குழுமம் மீண்டும் ஸ்டெர்லைட் ஆலையைத் திறக்க எவ்விதத்திலும் அனுமதி கொடுக்கக் கூடாது. சுற்றுச்சூழல் அனுமதியும் வழங்கக் கூடாது என்று கழகப் பொதுக்குழு வலியுறுத்துகிறது.

**தீர்மானம்: 20**

தமிழர்களின் பூர்வீகத் தாயகம் இலங்கைத் தீவு. வரலாற்றின் வைகறைக் காலத்திலிருந்து அவர்கள் கொடி உயர்த்தி அங்கே கொற்றம் அமைத்துச் சிறப்பாக வாழ்ந்து வந்தனர்.

பிரிட்டிசார் வெளியேறுகிறபோது, அதுவரை தமிழர்களின் நிர்வாகப் பகுதிக்குள் வராத சிங்களவர்களின் அதிகார நுகத்தடியில் தமிழர்களைச் சேர்த்துவிட்டுப் போய்விட்டார்கள். தமிழர்கள் கல்வி, வேலை வாய்ப்புகளில் உரிமை கேட்டனர். ஆனால், அவர்கள் நாலாந்தரக் குடிமக்கள் ஆக்கப்பட்டனர். ஈழத்துக் காந்தி தந்தை செல்வா தலைமையில் நீதி கேட்டனர்.




தமிழர்கள் நடத்திய அறப்போராட்டத்திற்குப் பரிசாக, துப்பாக்கிச் சூடு, பாலியல் வன்கொடுமைகள், கொலை, கொள்ளை இதுதான் நடைபெற்றன. தமிழர்கள் தொடர்ந்து வதைக்கப்பட்ட காரணத்தால், 'சுதந்திரத் தமிழீழம் ஒன்றுதான் தீர்வு' என்று வட்டுக்கோட்டையில், தந்தை செல்வா தலைமையில் தமிழர்கள் தீர்மானம் எடுத்தனர்.

இளைய தலைமுறை இதை முன்னெடுத்துச் செல்லட்டும் என்று தந்தை செல்வா பிரகடனம் செய்தார். அதையொட்டித்தான் உலகில் எவரும் இதுவரை கண்டும், கேட்டும் இராத நிகரற்ற சாகசங்கள் நிறைந்த யுத்தத்தை நான் நெஞ்சல் பூசிக்கும் தலைவர் பிரபாகரன் முன்னெடுத்தார்.

உலகத்தில் தாயக விடுதலைக்காக ஆயுதப் போராட்டங்கள் நடைபெற்று இருக்கின்றன. அப்படி நடைபெற்ற போராட்டங்களுக்கு மற்ற நாடுகளின் ஆயுத உதவிகள் கிடைத்தன. எந்த உதவியும் இல்லாமல் தரைப்படை, கப்பல் படை, விமானப் படை அமைத்து 'ஓயாத அலைகள்', 'அக்னி அலைகள்' 'ஆனையிறவுச் சமர்' என்று வெற்றி மேல் வெற்றிகளை தமிழர்கள் குவித்து வந்த நேரத்தில், சிங்களவர்களுக்கு உலக நாடுகளின் ஆயுதங்கள் கிடைத்தன. ஆனால், தமிழர்களுக்கு எந்த ஆயுதங்களும் கிடைக்காத சூழல்.

அன்றைய அதிபர் மகிந்த ராஜபக்ச. இன்றைய அதிபர் கோத்தபய ராஜபக்ச, ராணுவ அமைச்சராக இருந்த போது நடத்திய ராணுவப் படுகொலையில், லட்சக்கணக்கான தமிழர்கள் கிளிநொச்சியை நோக்கி வருகை தந்தனர்.

மருத்துவச் சாலைகள், பள்ளிகள் மீது சிங்களவர்கள் குண்டுகளை வீசினர். பல்லாயிரக்கணக்கான பொது மக்கள், இளம்பெண்கள் நாசமாக்கிக் கொல்லப் பட்டனர்.

இப்படிப்பட்ட படுகொலைகள் நடைபெற்ற வேளையில், உலகத்தின் நீதி கிடைக்காதா? நாதி கிடைக்காதா? என்று எதிர்பார்த்துக் கொண்டு இருந்த நேரத்தில் 2009, மே 17, 18 ஆகிய தேதிகளில் லட்சக்கணக்கான தமிழர்கள் கொன்று குவிக்கப்பட்டார்கள். அதற்கு நீதி வேண்டும் என்று இன்றைக்கு நாங்கள் கேட்கிறோம். மனிதகுல மனசாட்சியின் கதவுகளைத் தட்டுகிறோம்.

அர்மீனியர்களுக்குக்கூட ஜெர்மானிய நாடாளு மன்றம் நூறு ஆண்டுகளுக்குப் பிறகு தீர்மானம் போடுகிறது.

தமிழர்கள் நாதியற்றவர்களா? எங்களுக்கு நீதி கிடையாதா? லட்சக்கணக்கான தமிழர்கள் வதைக்கப் பட்டுக் கொல்லப்பட்டார்கள். 90 ஆயிரம் பெண்கள் இன்றைக்கு கணவர்களை இழந்திருக்கிறார்கள்.

மனிதகுலத்தின் நீதிமன்றமாகக் கருதுகின்ற ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் மன்றத்தில் நீதி கேட்கிறோம்.

என்ன நீதி? கொடூரமான படுகொலைகளைச் செய்த மகிந்த ராஜபக்ச கூட்டம் சர்வதேச நீதிமன்றக் குற்றக் கூண்டில் நிறுத்தப்பட வேண்டும். காணாமல் போன தமிழர்களை கண்டுபிடித்துக் கொடுக்கப்பட வேண்டும். சிறைப்பட்ட தமிழர்கள் விடுதலை செய்யப்பட வேண்டும். தமிழர்களின் காணிகளை, நிலங்களை அபகரித்துக் கொண்டு ராணுவத்தைக் கொண்டுபோய் குடியேற்றி இருக்கிறார்கள். அந்த நிலங்கள் மறுபடியும் தமிழர்களிடம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

தமிழீழத்திற்கு பொது வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும். உலகெங்கும் அகதிகளாக வாழுகின்ற தமிழர்களை அந்தப் பொது வாக்கெடுப்பில் பங்கேற்கச் செய்திட வேண்டும் என்ற கோரிக்கையை மறுமலர்ச்சி திமுக வலியுறுத்துகிறது.

**தீர்மானம்: 21**

கடந்த பிப்ரவரி மாதம் கடலுக்கு சென்ற ராமேஸ்வரம் மீனவர்கள் 4 பேர், பாம்பன் மீனவர்கள் 12 பேர் என மொத்தம் 16 பேர் இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்டு அந்நாட்டு சிறையில் அடைக்கப் பட்டனர். இவர்கள் கடந்த 2 வாரங்களுக்கு முன்பு நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டனர்.

அதன்பிறகு, வெளிச்சிறை முகாமில் தங்க வைக்கப் பட்டுள்ளனர். இவர்கள் தாயகம் திரும்ப உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என இந்திய தூதரக அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

ஆனால், மீனவர்கள் விடுவிக்கப்பட்டு 2 வாரங்களுக்கு மேல் கடந்தும் அவர்களை தாயகம் அனுப்புவதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இந்நிலையில், விடுதலை செய்யப்பட்ட மீனவர்கள் காணொளிப் பதிவு ஒன்றை வெளியிட்டுள்ளனர். அதில் அவர்கள்,

"இலங்கை நீதிமன்றத்தால் விடுதலை செய்யப் பட்டும் நாங்கள் சிறையில் இருப்பதுபோல்தான் இருக்கிறோம். வெளிச்சிறை முகாமில் நெருக்கமாக அடைத்து வைத்து சித்ரவதை செய்கின்றனர்.

சாக்கடை ஓடும் பகுதியில் தங்க வைத்துள்ளதால் கொசுக்கடியால் சரியான தூக்கமின்றி அவதிப்பட்டு வருகிறோம். இங்கு எவ்வித அடிப்படை வசதிகளும் இல்லை. சரியான நேரத்திற்கு உணவு இல்லாமல்

---

**தலைமைக் கழக அறிவிப்பு** **ஒழுங்கு நடவடிக்கை**

மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக வடசென்னை வடக்கு மாவட்டம், ஆர்.கே.நகர் பகுதிக் கழகச் செயலாளர் பாபா ஜெகன் அவர்கள் இன்று முதல் அவர் வகித்து வரும் பகுதிச் செயலாளர் பொறுப்பிலிருந்தும், அடிப்படை உறுப்பினரிலிருந்தும் நீக்கி வைக்கப்படுகிறார்.

**'தாயகம்'**
சென்னை - 8, 03.07.2026

**வைகோ**
பொதுச் செயலாளர், மறுமலர்ச்சி தி.மு.க.,

கஷ்டப்படுகிறோம். இந்திய தூதரக அதிகாரிகள் எங்களை பற்றி எதையும் கண்டுகொள்ளவில்லை. சிறை அதிகாரியிடம் ஏன் எங்களை இந்தியாவிற்கு அனுப்பவில்லை என்று கேட்டால் அலட்சியமாக பார்க்கின்றனர்."

என்று கண்ணீர் பொங்கல் தெரிவித்துள்ளனர். இந்த காணொளி பதிவு ராமநாதபுரம் மாவட்ட மீனவர் களிடம் கொந்தளிப்பை ஏற்படுத்தி உள்ளது.

எனவே, இந்த விவகாரத்தில் ஒன்றிய அரசு தலை யிட்டு 16 மீனவர்களும் தாயகம் திரும்ப உடனடியாக உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், இலங்கை அரசுக்கு அழுத்தம் தர வேண்டும் எனவும் தமிழக மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ராமநாதபுரம், புதுக்கோட்டை மாவட்டத்தில் இருந்து கடலுக்கு செல்லும் மீனவர்களை இலங்கை கடற்படையினர் கைது செய்வதும், அவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்துவதும் தொடர்கிறது.

இவ்வாறு கைதாகும் மீனவர்களுக்கு இலங்கை நீதிமன்றத்தால் கடும் சிறை தண்டனையுடன், பெரும் தொகை அபராதமாக விதிக்கப்படுகிறது.

ஒன்றிய பாஜக அரசு ,தமிழ்நாட்டு மீனவர்கள் சிங்கள கடற்படையினரால் கைது செய்யப்படுவதையும், மீனவர்கள் மீது தாக்குதல் நடத்தி, மீன்பிடி படகுகள், கருவிகளைப் பறிமுதல் செய்வதையும் தடுக்க தமிழ்நாடு அரசு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று கழகப் பொதுக்குழு வலியுறுத்துகிறது.

**தீர்மானம்: 22**

தமிழகத்தில் தொடக்க கூட்டுறவு கடன் சங்கங்களில் 2025 மே 1 முதல் 2026 பிப்., 28 வரை சிறு, குறு, பெரு விவசாயிகள் பெற்ற பயிர்கடன் தள்ளுபடி செய்யப் படும் என அரசு அறிவித்தது.

ரூ.75 ஆயிரம் வரை கடன் பெற்றவர்களுக்கு முழு தொகை, அதற்கு மேல் கடன் பெற்ற விவசாயி களுக்கு ரூ.35 ஆயிரம் வரை கடன் தள்ளுபடி செய்யப்படும். அதன்படி தமிழகத்தில் 14.43 லட்சம் விவசாயிகளுக்கு இருந்த ரூ.5932 கோடியே 23 லட்சம் பயிர் கடனை அரசு தள்ளுபடி செய்துள்ளது.

தமிழ்நாட்டில் உள்ள கூட்டுறவு வங்கிகளில் விவசாயிகள் பெற்ற பயிர்க்கடன்களைத் தள்ளுபடி செய்து தமிழ்நாடு அரசு அதிகாரப்பூர்வமாக அரசாணை வெளியிட்டுள்ளது வரவேற்கத்தக்கது.

ஐந்து ஏக்கருக்குள் நிலம் வைத்திருக்கும் விவசாயி களின் அனைத்து பயிர்க்கடன்களும் தள்ளுபடி செய்யப்படும் என்று அளித்த வாக்குறுதியை தவெக அரசு நிறைவேற்ற வேண்டும்.

விவசாயிகளின் வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டு நிலுவையில் உள்ள நீண்ட, மத்திய கால கடன்களையும் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று மதிமுக பொதுக்குழு வலியுறுத்துகிறது.

**தீர்மானம்: 23**

2002 ஆம் ஆண்டு வாஜ்பாய் தலைமையிலான அரசு என்.எல்.சி நிறுவனத்தின் 51 சதவீதப் பங்கு களை விற்க முடிவு செய்து அறிவித்தபோது, கழகப் பொதுச்செயலாளர் வைகோ அவர்கள் நாடாளு மன்றத்தில் கடுமையான எதிர்ப்பைப் பதிவு செய்தார். பின்னர் பிரதமர் வாஜ்பாய் அவர்களைச் சந்தித்து வலியுறுத்தி பங்குகள் விற்பனையை கைவிடச் செய்து, என்.எல்.சி நிறுவனம் தனியார் மயமாகாமல் தடுத்து நிறுத்தினார்.

அதன் பின்னர் 2006 இல் என்.எல்.சி., நிறுவனத்தின் 10 சதவிகித பங்குகளை விற்பதற்கு மன்மோகன்சிங் அரசு முயன்றபோது, கழகப் பொதுச் செயலாளர் வைகோ அவர்கள் எதிர்ப்பு தெரிவித்ததாலும், அப்போதைய தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்ததாலும் அந்த முயற்சி தடுத்து நிறுத்தப்பட்டது.

2011ஆம் ஆண்டுக்கு முன்பு, என்.எல்.சி., பங்குகள் ஒன்றிய அரசிடம் 93 சதவிகித பங்குகள் இருந்தது. 7 சதவிகித பங்குகள் ஊழியர்கள் வசம் இருந்தது. அதே ஆண்டு ஐ.பி.ஓ., வெளியீட்டுக்கு பிறகு, அரசின் பங்கு 90 சதவிகிதமாக குறைந்தது. 2013 ஆம் ஆண்டு ஒன்றிய அரசு 5 சதவிகித பங்குகளை விற்கப் போவதாக அறிவித்தது. அப்போதைய தமிழக முதல்வர் ஜெயலலிதா பங்கு விற்பனை நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்ததுடன், தமிழக அரசு சார்பில் 3.56 சதவிகித பங்குகளை வாங்கினார். அதனால் அப்போதும் பங்கு விற்பனை முயற்சி கைவிடப்பட்டது.

பின்னர், 2017 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரை ஓ.எப்.எஸ்., (Offer for Sale) நடவடிக்கைகள் மூலமாக அரசின் பங்குகள் 79.20 சதவிகிதமாக குறைக்கப்பட்டது.

கடந்த 2024 ஆம் ஆண்டு மீண்டும் 7 சதவிகித பங்குகள் விற்கப்பட்டது. இந்நிலையில் தற்போது மீண்டும் என்.எல்.சி.,யின் 3 சதவிகித பங்குகளை விற்கப் போவதாக ஒன்றிய அரசு அறிவித்துள்ளது.

தமிழ்நாட்டில் நவரத்தினா பொதுத்துறை நிறுவன மாக விளங்கும் என்எல்சி ஆண்டுக்கு 3670 கோடி ரூபாய் இலாபமிட்டும் நிறுவனமாக சிறப்பாக இயங்குகிறது.

நிலக்கரி சுரங்கம் அமைக்கவும், அனல் மின் உற்பத்தி நிலையம் அமைந்திடவும் நெய்வேலியைச் சுற்றி உள்ள மக்கள் தங்கள் வீடு, நிலங்களை அரசுக்கு தாரை வார்த்துக் கொடுத்தனர்.

இந்நிலையில் என்.எல்.சி நிறுவனத்தின் 3 சதவீத பங்குகளை மீண்டும் விற்பதற்கு ஒன்றிய பாஜக அரசு முனைந்திருப்பது கண்டனத்துக்குரியது.

என்எல்சி நிறுவன பங்குகள் விற்பனையைக் கைவிட வேண்டும் என்று மதிமுக பொதுக்குழு வலியுறுத்துகிறது. ●

# இளம் இந்தியர்கள் நாடாளுமன்றம் 2026 - திருச்சி அத்தியாயம்! துரை வைகோ எம்.பி., தொடங்கி வைத்து உரையாற்றினார்

திருச்சி தொகுதியில், Young Indians (Trichy Chapter) மற்றும் தளிர் இணைந்து திருச்சி, எம்.எம்.நகர், சௌடாம்பிகா உலகப் பள்ளி (Sowdambikaa world school) அரங்கில் நடத்திய, பல்வேறு பள்ளிகளின் 9 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்கள் பங்கேற்ற இளம் இந்தியர்கள் நாடாளுமன்றம் 2026 - திருச்சி அத்தியாயம் (Young Indians Parliament 2026 - Trichy Chapter) நிகழ்ச்சியை 28.06.2026 அன்று காலை 9:30 மணியளவில் தொடங்கி வைத்து துரை வைகோ எம்.பி., சிறப்புரை ஆற்றினார்.




முதலில், மதிப்பிற்குரிய Young Indians அமைப்பின் நிர்வாகிகள், சிறப்பு விருந்தினர்கள், பள்ளி நிர்வாகிகள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் அன்பு மாணவ, மாணவியர்களை வரவேற்றார்.

ஜனநாயகம், தலைமைத்துவம் மற்றும் பொதுச் சேவை குறித்த புரிதலை இளம் தலைமுறைக்கு ஏற்படுத்தும் இந்த சிறந்த முயற்சிக்காக Young Indians அமைப்பிற்கும் சௌடாம்பிகா உலகப் பள்ளிக்கும் (Sowdambikaa world school) தனது பாராட்டுகளைத் தெரிவித்துக் கொண்டார்.

இன்று நீங்கள் ஒரு போட்டியில் பங்கேற்பவர்கள் மட்டுமல்ல; நாடாளுமன்ற உறுப்பினர்களின் பொறுப்பை ஏற்று, சட்டங்கள் எவ்வாறு உருவாகின்றன, விவாதங்கள் எவ்வாறு நடைபெறுகின்றன, ஜனநாயகம் எவ்வாறு செயல் படுகிறது என்பதை அனுபவிக்கும் வாய்ப்பைப் பெறுகிறீர்கள் என்று மாணவ மாணவியரிடம் அவர்களின் இப்பங்களிப்பின் முக்கியத்துவத்தை குறித்து எடுத்துரைத்தார்.

மேலும், இந்தியா உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடு. ஜனநாயகம் என்பது வாக்களிப்பது மட்டுமல்ல; மக்களின் கருத்துகளைக் கேட்பதும், மாறுபட்ட கருத்துகளை மதிப்பதும், அரசியலமைப்பைப் பாதுகாப்பதும், ஒவ்வொரு குடிமகனின் குரலும் மதிக்கப்படுவதை உறுதி செய்வதுமாகும்.

கடந்த 24 மாதங்களாக உங்கள் நாடாளுமன்ற உறுப்பினராக பணியாற்றிய அனுபவத்தில், நாடாளுமன்றம் என்பது அரசியல் செய்வதற்கான இடம் மட்டு மல்ல; மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் உயரிய மேடை என்பதைதான் கற்றுள்ளேன் என்பதை மாணவ, மாணவியருடம் பகிர்ந்து கொண்டார்.

அப்போது, அண்மையில் நாடாளுமன்றத்தில் நடைபெற்ற பெண்கள் இட ஒதுக் கீடு தொடர்பான அரசியலமைப்பு சட்ட திருத்த மசோதா மீதான விவாதத்தை சுருக்கமாகப் பகிர்ந்து கொண்டார்.

பெண்கள் இடஒதுக்கீட்டை எதிர்க்கட்சிகள் எதிர்த்தன என்பது தவறான கருத் தாகும். பெண்களின் பிரதிநிதித்துவம் அதிகரிக்க வேண்டும் என்பதில் அனை வருக்கும் ஒருமித்த ஆதரவு இருந்தது. ஆனால், அதனை தொகுதி மறுவரை யறையுடன் (Delimitation) இணைத்ததே முக்கிய பிரச்சனையாக உருவெடுத்தது.

தமிழ்நாடு போன்ற மாநிலங்கள் பல ஆண்டுகளாக மக்கள் தொகை கட்டுப் பாட்டில் சிறப்பாக செயல்பட்டுள்ள நிலையில், அதனால் அவற்றின் நாடாளுமன்ற பிரதிநிதித்துவம் குறையக் கூடாது என்ற கருத்தை பல உறுப்பினர்கள் வலியுறுத்தினர்.

இதற்கு பதிலளித்த ஒன்றிய அரசு, எந்த மாநிலமும் பிரதிநிதித்துவத்தை இழக்காது என்றும், தேவையான பாதுகாப்பை வழங்கத் தயாராக இருப்பதாகவும் தெரிவித்தது. இருப்பினும், இத்தகைய உறுதி வெறும் வாய்மொழி வாக் குறுதியாக இல்லாமல், அரசியலமைப்பிலேயே நிரந்தர சட்டப் பாதுகாப்பாக இடம்பெற வேண்டும் என்பதே பல உறுப்பினர்களின் நிலைப்பாடாக இருந்தது என்பதையும் அரிய வாய்ப்பை பயன்படுத்தி பேசினார்.

அதன் பிறகு இந்த இரண்டு ஆண்டுகளில்தான் திருச்சி நாடாளுமன்ற உறுப் பினராக ஆற்றிய பணிகளை தொகுத்து விளக்கமாக மாணவர்கள் முன் எடுத்து வைத்து ஒரு நாடாளுமன்ற உறுப்பினரின் பணிகள் தேசத்தின் வளர்ச்சிக்கும், மக்களின் நல்வாழ்விற்கும் வழங்கும் பங்களிப்பை எடுத்துக்கூறி உரையாற்றினார்.

இறுதியாக, அரசியலமைப்பைப் படியுங்கள். மாறுபட்ட கருத்துகளை மதியுங்கள். ஆர்வத்துடன் கேள்வி கேளுங்கள். நேர்மையுடனும் ஒழுக்கத்துடனும் வழி நடத்துங்கள். தலைமைத்துவம் என்பது அதிகாரத்தைப் பற்றியது அல்ல; பொறுப்பையும் பொதுச் சேவையையும் பற்றியது என்று கூறி, Young Indians Parliament 2026 நிகழ்வில் பங்கேற்கும் ஒவ்வொருவருக்கும் தனது மனமார்ந்த வாழ்த்துகளை வழங்கினார்.

இன்றைய இளம் நாடாளுமன்ற உறுப்பினர்கள், நாளைய பொறுப்புமிக்க தலைவர்களாக உயர வேண்டும் என்று மனப்பூர்வமாக வாழ்த்தினார்.

துரை வைகோ அவர்களின் உரைக்கு பிறகு, மாணவர்கள் பலதரப்பட்ட கேள்வி களை முன்வைத்தனர். அதற்கு அவர் விளக்கமாக பதிலளித்து அவர்களை உற்சாகப்படுத்தினார். ●

Posted at Egmore RMS, Pathrika Channel, Chennai-600 008 **Posted on 10.07.2026**
**16 SANKOLI □ 17.07.2026** Date of Publication Weekly Every Friday Registered No: TN/CCN/456/2024-2026
Registered with the Registrar of Newspaper for India Under No. 14860/68 Licensed to post without Prepayment No: TN/PMG(CCR)WPP - 461/2024-2026




மறுமலர்ச்சி திமுக
அதிகாரப்பூர்வ வார ஏடு

# சங்கொலி

## 30 ஆம் ஆண்டு நிறைவு விழா

'பொங்கு தமிழர்க்கு இன்னல் விளைத்தால்
சங்காரம் நிசமெனச் சங்கே முழங்கு'



17.07.2026
வெள்ளிக்கிழமை
மாலை 4 மணி
**சிராஜ் மகால்**
எழும்பூர், சென்னை

தலைமை
ஆடிட்டர் **ஆ.அர்ஜுனராஜ்**
அவைத்தலைவர்

வரவேற்புரை
**மு.செந்திலதிபன்**
பொருளாளர்

முன்னிலை
**துரை வைகோ** எம்.பி.,
முதன்மைச் செயலாளர்

துணைப் பொதுச்செயலாளர்கள்
செஞ்சி **ஏ.கே.மணி**
டாக்டர் **ரொஹையா**
**சு.ஜீவன்** எம்சி, புதூர் **மு.பூமிநாதன்**
டாக்டர் **சி.கிருஷ்ணன்**

நெறியாள்கை
**ஆ.வந்தியத்தேவன்**
தலைமைக் கழகச் செயலாளர்



வாழ்த்துரை
மாண்புமிகு **இராஜ்மோகன்**
பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்

பேராசிரியர் **கே.எம்.காதர் மொய்தீன்**
இ.யூ.மு.லீக் - ஆசிரியர், மணிச்சுடர்

இந்து **என்.ராம்**
இந்து குழும தலைவர்

**எஸ்.ஏ.பெருமாள்**
இணை ஆசிரியர் - தீக்கதிர்

உணர்ச்சிக் கவிஞர்
**காசி ஆனந்தன்**

**மு.வீரபாண்டியன்**
மாநில செயலாளர், சி.பி.ஐ.

நக்கீரன் **கோபால்**
ஆசிரியர், நக்கீரன்

**திருமுருகன் காந்தி**
ஒருங்கிணைப்பாளர், மே 17 இயக்கம்

**புகழேந்தி தங்கராஜ்**
திரைப்பட இயக்குநர்

**எஸ்.கோவிந்தராஜ்**
தலைமை நிருபர், குமுதம் குழுமம்

நிறைவுரை
**வைகோ** ஆசிரியர், சங்கொலி
பொதுச்செயலாளர், மறுமலர்ச்சி திமுக

நிகழ்ச்சி ஒருங்கிணைப்பு:
**சென்னை மண்டல மாவட்டச் செயலாளர்கள் / பொறுப்பாளர்கள்**
சைதை **ப.சுப்பிரமணி** எம்சி, **டி.சி.இராஜேந்திரன்**, நெமிலிச்சேரி **மு.பாபு**
**மா.வை.மகேந்திரன், ஜி.கருணாகரன்**, ஆவடி **எஸ்.சூர்யகுமார்**
**பூ.லோகநாதன்**, பாரத் **கே.ஆர்.ராஜேந்திரன், நா.பாஸ்கர்**
**பா.டில்லிபாபு**, நொச்சிகுப்பம் **சி.ரவிக்குமார்**, காயல் **இ.கோவிந்தராஜ்**

நன்றியுரை: **தென்றல் நிசார்**
வடசென்னை கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர்